முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 7-8-59 | வெள்ளி | ஒலி: 16

கேரளத்தில் கிளர்ச்சிக்காரர்கள் வெற்றித் திருவிழா நடத்துகிறார்களாம்!

பாரத புத்திரர்கள் தோண்டிய பிரேதக் குழியிலே 'காந்தீயம்!'

அகிம்சா சத்ய அஸ்தேய;
பிரமச் சரிய அசங்க்ரக!
சரீர சிரம அஸ்வாத;
சர்வ்சர பயவர்ஜன!
சர்வ தர்ம சமானத்வ;
சுதேசி ஸ்பரிச பாவனு!
வினம்ரவ்ரத நிஷ்டாசே;
ஏஏகாதச சேவ்ய ஹைம்!

—இதென்ன புதுமொழியாய் இருக்கிறதே என்ற ஆச்சரியம் பலரைஅணைத்துக்கொள்ளலாம். ஆனல், இந்த 'சுலோகத்'தை — பதினெரு விரதங்கள் பற்றிப் பேசும் வேதபாடத்தைப் பழைய காங்கிரஸ்காரர்கள் யாராவது இருந்தால் அறிந்துகொள்வார்கள்.

ஏன்; கொட்டும் பனியில் காலை 4-மணிக்கே எழுந்து, கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டு இந்த விரதங்களைச் சொல்லும் 'கதர்ப்பிரியர்கள்' இன்றுகூட உண்டு. கதர் வித்யாலயங்களில்!

காரணம், இது காந்தியாரால் போற்றப்பட்ட சுலோகம்; தம்மைப் பின்பற்றுவோர் கடைப்பிடிக்கவேண்டிய விரதங்கள் — என்று அவராலேயே அறிவிக்கப்பட்டவை. அப்பதினெரு விரதங்களை இன்றும் கடைப்பிடிப்பவர்கள்தாம் காந்தீயப் பாதையில் நடப்பவர்கள்—என்று'காந்தீய'த்தை யறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

அப்படியென்ன அதிசயமான விரதங்கள் அவை? ஆம்; அவை புதுக் காங்கிரஸ்காரர்களுக்கு அதிர்ச்சியையும், பழைய காங்கிரஸ்காரர்களுக்கு ஒருவித பயத்தையும் ஏற்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்ததுதான் !

அகிம்சை, சத்தியம், கள்ளமில்லா உள்ளம், பிரம்மச்சரியம், சுரண்டல் எண்ணம் இல்லாமை, உடலுழைப்பு. நாவடக்கம், அஞ்சாமை, சர்வசமய சமரசம், தீண்டாமை, சுதேசி மனப்பான்மை —ஆகிய இந்தப் பதினெரு விரதங்களைக் கடைப்பிடிப்பேன் — என்ற உறுதிமொழிதான் அந்த சுலோகம்; காந்தியார் போற்றிய சுலோகம்!

மூன்று சிங்கம் போட்ட நோட்டுக்கு மயங்காத ஒரு சிலரிடம் காந்தியார் படத்தைக் காட்டி மயக்கி ஓட்டு வாங்குகிற காங்கிரசார், காந்தியாரின் இந்த விரதங்களைக் கடைப்பிடிக்கிறார்களா? — அல்லது இந்த விரதங்களைப் பிரேதக் குழியிலே அடக்கம் செய்துகொண்டிருக்கிறார்களா?-- என்பதை அவர்களின் அரசியல் நாடகத்தின் ஒவ்வொரு காட்சி முடிவும் கூறியவண்ணமிருக்கின்றது.

மேற்கூறிய விரதங்களை இவர்கள் அழிப்பதென்றே பதவிபீடமேறிய காலம் முதற்கொண்டு கடும் விரதம் பூண்டு செயலாற்றி வருகிறார்கள்.

'அகிம்சா மூர்த்திகள்'—என்று வர்ணித்துக் கொண்ட இவர்கள ஆட்சியில்தான் ஆயிரக்கணக்கான பிணங்கள் விழுந்தன; ஆயிரமாயிரம் பெண்களின் தாலிகளை அறுத்தார்கள்; மராட்டியத்திலே, மலையாளத்திலே, விந்தியமலை நாட்டிலே, வங்காளத்திலே, குஜராத்திலே, காவிரி நாடாம் தமிழ நாட்டிலே துப்பாக்கி தூக்கி விளையாடினர்கள்; சுடுகாட்டில் இடநெருக்கடி ஏற்படும் வண்ணம் சுட்டுக் குவித்தார்கள்—இப்படி அவர்கள் அகிம்சை'யை மானபங்கப் படுத்திய கதைத்தொடர் நீண்டு கொண்டே போகும்!

சத்தியத்தைக் கடைப்பிடிப்பவர்கள—என்று தங்களை வர்ணித்துக் கொண்டார்கள். சத்தியமேவ ஜெயதே (உண்மையே வெல்லும்) —என்று குறி போட்டுக் கொண்டார்கள். ஆனல் தேர்தல் காலத்திலும், கலவரக் காலங்களிலும் எதிர்க்கட்சிகளுக்குத் தந்த வாக்கினை நிறைவேற்றுவதிலும் இவர்கள் சத்தியத்தை சின்னபின்னப் படுத்தினர்; சத்தியம், உண்மை—என்பதெல்லாம் பழைய காலத்தில் பெருமதிப்புக் கொண்டிருந்த காசுகள்—செல்லாக் காசுகள் என்று நிரூபித்துக் காட்டி வந்திருக்கின்றனர், கடந்த காலங்களில்!

ஏன் அண்மையில் கூட உண்மைக்குப் புறம்பாக நேருபிரான் அவர்கள் கேரளப் பிரச்சினைப் பற்றிக் கூறியிருப்பது, உண்மை பேசுவதில் பற்றுக்கொண்ட ஜனநாயகவாதிகள் வெட்கித் தலைகுனியும் நிலையை உண்டாக்கியிருக்கிறது!

'கேரளத்தில் தலையிடும்படி எதிர்க்கட்சிகள் மத்திய அரசை வேண்டின' — என்றுகூறிய நேரு, 'கேரள அரசுகூட மத்தியத் தலையீட்டை விரும்பிற்று.' — என்று கம்யூனிஸ்ட்டுகளின் மாரடைத்து விடும்படி ஒரு மாபெரும் பொய்யை உதிர்த்திருக்கிருர். கேரள அரசு மத்தியத்தலையீட்டை விரும்பிற்று; — அல்லது மத்திய அரசு தலையிடக்கூடாதென்று விரும்பிற்று—என்பதை அரசியல் நிகழ்ச்சிகளை அவ்வளவு கோர்வையாகத் தெரிந்துகொள்ளாதவர்கள் கூட கூறிவிடுவார்கள்! வரலாறு கண்டு அதிசயிக்கத் தக்க வகையில் காந்தி சீடராம் நேருவின் வாயிலிருந்து பொய் உதிர்ந்திருக்கிறது! வாய்மை இவர்களைக்கண்டு நடுநடுங்கி ஓட்டம் பிடித்த நிகழ்ச்சித்தொகுப்பில் இது ஒரு புது ஏடு!

அவர்களின் காந்தியார் செப்பியபடி பிரமச்சாரிகளாகவோ— அல்லது பிரமச்சரிய ஒழுக்கப்படி நடப்பவர்களோ மிகக் குறைவு!

உடலுழைப்பு — என்று பேசத்தான் தெரியுமே தவிர, உடலை உழைப்புக்குத் தகுந்தபடி மாற்றியமைக்கத் தெரியாதவர்கள்தான் அங்கு அதிகம்.

சுரண்டல் எண்ணம்—மத்திய, மாநில ஆட்சிச் சக்கரத்தில் அந்த எண்ணம் எனும் எண்ணெய் வார்க்க வார்க்கத் தான் ஒழுங்காக அது ஓடிக்கொண்டிருக்கிறது.

நாவடக்கம்—இந்த அடக்கம் சிறிதும் இல்லாத காரணத்தால்தான் அவர்களுக்குள்ளேயே 'கூக்குரல்' எழுகிறது. 'வாய்ப் பேச்சு போதும்; போதும்!' என்று!

அஞ்சாமை:— அலை கட்ட பிரிட்டிஷ் ஆதிபத்யத்தையும் துச்சமென மதித்து தனக்குரிய சூயஸ் கால்வாயைப் பறித்துக் கொண்ட எகிப்து நாசரையும் காண்கிறோம்; கோவாவை இன்னும் விட்டு வைத்திருக்கும் அஞ்ச வேண்டாததற்கு அஞ்சும் நேருவையும் காண்கிறோம்.

சர்வ சமய சமரசம்—இந்திய சர்க்கார் அழிந்துபோன இந்து மதத்தின் சோமநாதர் ஆலயத்திற்கு மட்டும் அஸ்திவாரக்கல் போடுவதையும் காண்கிறோம்.

சுதேசி மனப்பான்மையைப் பொறுத்தவரை—காங்கிரஸ் கட்சியினர், ஆட்சி பீடத்தார் — அவரது ஆதரவு பெற்ற 'கதர் இலாகாவினர்' ஆகியோரின் கொள்கைகள், நடைமுறைகள் மேற்சொன்ன பதினெரு விரதங்களையும் படுகொலை செய்வதாகவே தோற்றம் அளிக்கின்றன.

உப்பென்றும், சீனி என்றும், உள்நாட்டுச் சேலை என்றும் செப்பித் திரிகின்ற இந்தக் 'கதர்ச் சட்டைகள்' வைத்து நடத்தும் பட்டணத்துக் காதிபவன்களைப் பார்த்தோர், சுதேசி எண்ணத்தையே மறந்துவிடுவார்கள்.

இரவைப் பகலாக்கும் விளக்கு வரிசைகள்!

உள்ளே இருப்பதை எடுத்துக் காட்டும் கண்ணடி அறைகள்!

வழவழப்பான தரை!

'வாருங்கள்' — என்றழைக்க வாலைக்குமரிகள்!

காற்றை வெளியேற்றும் விசிறிகள்!

—இத்தனை 'விளம்பரச் சரக்குகளும்', விளம்பரம் விரும்பாத காந்தியார்கண்டுபிடித்த ராட்டை நூற்ற நூலை விற்கத்தான்; கதர்த் துணியை விற்கத்தான்!

கைக்குத்தல் அரிசி இது; கையால் நூற்றுக் கையால் நெய்த கதர் என்பார்கள்: பனைவெல்லம் என்பர்; வார்தா செருப்பு என்று கூறுவார்கள் — அத்தனையும் சுதேசி — கிராமோத்யோக் — என்று பெருமை பேசுவர்! சுதேசி உணர்வு கொண்டோரே, வாங்குங்கள்—என்பார்கள்!

சுதேசிஉணர்ச்சியைத்தூண்டி, விதேசி (வெளிநாட்டு) விளம்பரப் பொருட்களின் பளபளப்பிலே வியாபாரம் செய்யச் சொல்வார்கள்!

ஆம்; அவர்களின் 'சுதேசி' உணர்வு வெறும் கேலிக்கூத்தாகி விட்டது.

ஐயோ பாவம், காந்தியாரின் 'சுதேசித் தத்துவம்', அதிகாரப் பித்துக்கொண்ட அவருடைய சீடகோடிகளின் கோரக் கரங்களினல் சின்னபின்னப் படுத்தப்படுகிறது!

பதினெரு விரதங்கள் கொல்லப்படும் விதம் காதி கிராமோத்யோக்பவன்களில் நுழைந்தவர்களுக்கு நன்கு புலப்படும்! ஆம்; இந்த'பவன்'களேகாந்திய கதர்க் கொள்கையின்படி தவறுடையன!

அவனவன் துணியை அவனவனே நூற்று நெய்து அணிந்து கொள்வதுதான் அவர் கூறிய 'ஸ்வாவலம்பன்' திட்டம்!

இத்திட்டத்தை நிறைவேற்றிப் பார்த்துத் தோல்வி கண்ட இந்த 'கதர்வாலாக்கள்'தான் கதர்பவன்களைத் தோற்றுவிக்க ஆரம்பித்தனர். படிப்படியாக காந்தியாரின் பதினெரு விரதங்களைக் கொல்ல ஆரம்பித்தனர்!

மெர்குரி லைட்டுகள், விசிறிகள் போட்டனர்; சுதேசித்தத்துவத்தைக் கொன்றனர். ஏர்க்கண்டிஷனுள்ள காண்டீன்கள் வைத்தனர்; இட்லி மாவு ஆட்டிட யந்திரங்கள் வைத்தனர்--உடலுழைப்பு —எனும் தத்துவத்தை ஆலையிலிட்ட கரும்பாக்கினர் !

தங்கள் வியாபாரத்தை எப்படியாவது பெருக்குவது எனத்திட்டமிட்டனர் —பிரமச்சரியம்—கள்ளமில்லா உள்ளம், சத்தியம்— ஆகிய தத்துவங்களை மானபங்கப்படுத்தினர், அவர்கள் அகராதிப்படி!

—இத்தகு விதத்தில் காந்தியாரின் உயிருக்குயிரான பதினெரு விரதங்களை அரசியலிலும், கதர் வணிகத்திலும் பயங்கரக் கொலை புரிந்த இந்த ராட்டைக் கொடிக்காரர்கள்தான் காந்தியாரின் வாரிசுகள் என்று வெட்கமின்றிக் கூறித்திரிகின்றனர்!— இது ஆச்சரியத்தின் துவக்கக்கட்டம்!

வளர்த்த கொள்கையினையே குரல்வளையைப் பிடித்து ஒடிக்கும் இம் மாபாதகர்களை நம்புகிறார்களே நாட்டுமக்கள்! இது ஆச்சரியத்தின்ன் முடிவு கட்டம்!! ஃ

ஆகஸ்ட் 21—ல் வெளிவருகிறது !

இன முழக்கம்

(வார ஏடு)

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

பதிப்பாளர்: கண்ணப்பா வள்ளியப்பன்

முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

4, இராசகோபால் நாய்க்கன் சந்து,
சிந்தாதிரிப்பேட்டை — சென்னை—2.

வெள்ளி 7—8—59 சென்னை

சர்வாதிகாரத்தின் சதிராட்டம்!

கேரளத்திலே துரோகம் வென்று விட்டது!

அரசியல் சட்டம் என்ற ஆபத்தான மலைப்பாம்பு, ஜனநாயகக் குழந்தையை விழுங்கி ஏப்பமிட்டு, உடல் நெளித்து உருண்டு கிடக்கிறது!

இருபத்தாறு மாதங்களாகப் பதவி பறிபோய்விட்ட கொடுமையால் குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்துச் சிதறி ஜனநாயகக் குழந்தையின் அழகான முகத்தை அலங்கோலப்படுத்தி விட்டது!

சூழ்ச்சிக் கயிற்றால் ஆட்டுவிக்கப்பட்ட கேரளக் குழப்பம், சட்டரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைப் படுகுழியில் சாய்த்து விட்டது.

காந்தியாரின் ஆவி அழுகிறது; தன் அந்தரங்க சீடர்கள் அக்கிரமங்களுக்குச் சிரம் தாழ்த்தும் காட்சியைக் கண்டு அழுகிறது; அரசியல் நேர்மையை வெட்டி; அணுவணுவாகக் கூறுபோட்டு; நீசக் குணத்திற்கும் மோசத்தனத்திற்கும் உணவாக்கிவிட்டார்களே—பிணமாக்கிவிட்டார்களே—என்று கண்ணீர்விட்டு அழுகிறது.

எது நடக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோமோ; அது நடந்து விட்டது! எதை நடத்தவேண்டும் என்று பாரத புத்திரர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்களோ; அதை நடத்திவிட்டார்கள்!

முடியாட்சியின் புதைகுழியிலிருந்துதான் ஜனநாயகம் முளைத்தெழுந்தது; முடியாட்சியின் தத்துவம் என்ன? பரவி பரம்பரை வாரிசுக்கே உரிமை என்பதுதான். மன்னரின் மகன் மண்டூகமாக இருப்பான்; அந்த வம்சத்திலே அறிவு வரண்டு ஞானசூன்யம் உருப்பெற்றிருக்கும்; இருந்தாலும் மன்னனுக்கு மகனாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால், அறிஞர்கள் வீற்றிருக்க வேண்டிய ஆட்சிபீடத்தில் அந்த அறிவுகெட்டவன் வீற்றிருப்பான்.

—இன்று காங்கிரஸ்காரர்கள் நடத்திக்காட்டுகிற ஜனநாயகம் அதே தத்துவத்தைத்தான் சொல்வதாக இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள், அவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருப்பதாலேயே பொதுமக்களின் பெரும்பான்மை வாக்கு இல்லாவிட்டாலும் பதவியிலே ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமாம். அதனால்தான் 'வல்லான் வகுத்ததே சட்டம்' என்ற சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை அழித்துவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றி இருக்கிறார்கள்.

குடியரசுத் தலைவரின் பிரகடனத்தில், கேரளத்துக் கவர்னர் அனுப்பி வைத்த தாக்கீது, தன்னைத் திருப்திப்படுத்தியதால்தான் இந்த நிலை மேற்கொள்ளப்பட்டது என்று குறிப்பிடுகிறார். அப்படியானால், கவர்னர் அனுப்பி வைத்த அந்தத் தாக்கீது யாருடைய ஆலோசனையின்பேரில் செய்யப்பட்டது என்கிற கேள்வி இன்று அரசியல் சட்டம் படிக்கின்ற அத்தனை பேருடைய உள்ளங்களிலும் கொந்தளித்து எழுகின்றது.

அரசியல் சட்டம் தயாரிக்கும்போது டாக்டர் அம்பேத்கார் திட்டவட்டமாக விளக்கி இருக்கிறார்—மாநிலத்து கவர்னர்கள் தங்கள் தங்கள் விருப்பம்போல் எந்தக் காரியங்களையும் செய்வதற்கு இல்லை; மந்திரிசபையின் அபிப்பிராயங்களைத் தூக்கி எறிவதற்கு அவருக்கு உரிமை கிடையாது; அவருக்கிருக்கிற உரிமையெல்லாம் தான் எந்தக் கட்சியின் பிரதிநிதியும் அல்ல என்ற உணர்ச்சியோடு மந்திரி சபைக்கு ஆலோசனை வழங்குவதுதான்.

—நிலைமை அப்படியிருக்க, கேரளத்து மந்திரி சபையின் அபிப்பிராயத்தைக் கேட்காமல் –சிபார்சைப் பெறாமல்—அந்த மந்திரி சபையை நீக்கவேண்டும் என்கிற தாக்கீதை குடியரசுத் தலைவருக்கு எந்த அடிப்படையின்கீழ் அனுப்பலாம்?

—சட்டம் படித்தவர்கள் இப்படியெல்லாம் கேள்விகளை எழுப்புகிறார்கள்.

"கத்தோலிக்கர் கேரள மாநிலத்தின் கல்விச்சாலைகளில் பெரும்பாலானவைகளை நடத்தி வருகின்றனர். இவர்களை எதிர்த்துக் கொண்ட காரணத்தால்தான் கேரள மந்திரிசபை கவிழ்ந்து விட்டது."

—என்று பண்டித நேரு பாராளுமன்றத்திலே வேடிக்கையான விளக்கம் விடுத்திருக்கிறார்.

அப்படியானால் அவரது பேச்சின் கருத்து என்ன? நல்லாட்சிக்கு எதிராக ஒரு பிற்போக்குக் கும்பல் குறுக்கே வந்து நிற்குமானால், அதற்கு அடிபணிந்து ஆட்சியை அவர்களுக்கு உகந்த வகையில் வளைத்துக் கொடுக்கத்தான் வேண்டுமோ? அப்படியானால், அவர்கள் கொண்டுவருவதாகச் ,சொல்லிக்கொண்டிருக்கும் நிலச்சீர்திருத்தச் சட்டத்தை இந்த நாட்டு நிலப்பிரபுக்கள் ஒட்டுமொத்தக் கூட்டாக எதிர்த்து நின்றால், பண்டிதரும் அவர் கூட்டத்தாரும் அவர்களுக்குப் பயந்து, கை கட்டி, வாய் புதைத்து, கூடைக் கணக்கிலே இதுவரை தீட்டிய தீர்மானங்களுக்குத் தீ வைத்து விடுவார்களா?

மதச் சார்பற்ற அரசை உருவாக்கிவிட்டோம்—என்று மார்தட்டிக் கொள்ளுகிற பண்டிதர், மதத் தலைவர்களை எதிர்த்ததால்தான் ஒரு மாநிலத்தின் ஆட்சி வீழ்ந்து போய்விட்டது என்று 'நீலிக் கண்ணீர்' வடிப்பது வெட்கக்கேடாக இல்லையா?

செய்வதை எல்லாம் செய்துவிட்டு, அதற்கு விபரீத விளக்கம் கொடுக்கும் பண்டிதரின் பேச்சு அவரை ஜனநாயகத்தின் எதிரியாகத்தான் சித்தரித்துக் காட்டவில்லையா?

ஜனநாயகம் வளரும் பருவத்தில் இருக்கும் இந்தக் காலத்தில் மத்திய அரசு எடுக்கும் ஒவ்வொரு முடிவும் இனி வரும் காலத்திற்கு ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும். சட்டசபையில் பெரும்பான்மை பெற்றிருக்கும் ஒரு மந்திரி சபையை அதன் பதவிக் காலம் முடியும் முன்பு கலைக்க வேண்டுமென்றால் அதற்கு என்னென்ன காரணங்கள் வேண்டும்? எதிர்க் கட்சிக்காரர்கள் குழப்பம் விளைவித்தால் சட்டரீதியாக இயங்கும் அந்த ஆட்சியைத் தகுதியற்றது என்று கூறிவிட முடியுமா? குற்றச்சாட்டுப் பட்டியலைத் தயாரித்து, குடியாட்சித் தலைவரைப் பேட்டி கண்டால் அந்த நிலைமை வெகு சுலபத்தில் உருவாகிவிடுமோ?

—இது போன்ற கேள்விகள் இப்போது கேரளத்தில் குடியாட்சித் தலைவரின் குறுக்கீட்டின் மூலம் எழுந்திருக்கின்றன.

இப்போது டெல்லி மூலவர்கள் கையாண்டிருக்கும் தந்திரங்கள் எதிர்கால இந்திய உபகண்டத்து அரசியலில் நேர இருக்கிற ஆபத்துக்களை விளக்கும் அபாய விளக்காகத்தான் அமைந்திருக்கின்றன.

தற்போது ஆசிய நாடுகள் அனைத்திலும் சென்ற உலகப் போருக்குப் பின்பு தோன்றிய ஜனநாயகச் சூழ்நிலைகள் மறைந்து சர்வாதிகாரத்தின் நிழல் படுவதைப் பார்க்கிறோம். அராபிய நாடுகளிலே இராணுவத்தினரின் செல்வாக்கையும், பர்மாவிலே ஜனநாயகம் தத்தளிப்பதையும், பாக்கிஸ்தானிலே அயூப்கான் அரியணை ஏறியதையும், இந்தோனேசியாவிலே சுகர்ணோ கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் என்ற பெயரில் சர்வாதிகாரியாக மாறி வருவதையும் காண்கிறோம்.

கேரளத்தில் இன்று நேரு பண்டிதர் செய்திருப்பதை அயூப்கானின் அட்டகாசம் என்று சொல்லுவதா; சுகர்ணோவின் கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயக சர்வாதிகாரம் என்று சொல்வதா—என்றுதான் யோசிக்கவேண்டியிருக்கிறது.

பொதுவாக, கேரளக் கம்யூனிஸ்ட் சர்க்காரில் ஊழல்கள் மலிந்துவிட்ட காரணத்தால்தான் இந்த முடிவு எடுத்தோம் என்று பண்டிதர் கூறுவதானது, சோறி சிரங்கு பிடித்தவனுக்கு சோறு போடாதே; எனக்கு சோற்றை வாயிலே ஊட்டு—என்று குஷ்டரோகி கூறியது போன்ற வேடிக்கையாகத்தான் தோன்றுகிறது.

கேரளத்துக் கொடுமை நமக்கெல்லாம் வருத்தமாக இருந்தாலும், ஒரு விதத்தில் மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருக்கிறது. நமது உரிமைகள் வடக்கத்தியாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற வரையில் இந்த நிலைமையை நாம் எதிர்பார்த்துத்தான் தீரவேண்டும் என்பதை இனியாவது கம்யூனிஸ்ட்டுகள் உணர ஆரம்பிப்பார்கள் என்று நம்புகிறோம். ❖

அன்புள்ள மாதவி,

மக்களிடையே தேசியஉணர்வு ஏற்பட்டு, தேசிய இனங்கள் தோன்றிய விதத்தை முன் கடிதம் ஒன்றில் உனக்கு எழுதியிருந்தேன். தேசங்கள் உருவாகவே, பலம்படைத்த மன்னர்களும் தோன்றினர்கள். தேசிய உணர்ச்சியின் அடிப்படையில் மக்களை ஒன்றுபடுத்தி, அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தங்கள் கரங்களில் குவித்துக் கொண்டனர். மன்னர்கள் சர்வாதிகாரிகளாகத் திகழ்ந்தனர். ஆண்டவனின் அவதாரமாகவே தங்களை எண்ணிக்கொண்டு, நாட்டையாள 'தெய்வீக உரிமை' பெற்றிருப்பதாகவும் சாதித்தனர். இந்தக் கொள்கையில் ஊறித்திளைத்து, "நாடா? அது எங்கே இருக்கிறது? அப்படி ஏதும் இல்லை; நான்தான் நாடு!" என ஆணவத்தோடு கொக்கரித்தவன் பிரஞ்சு மன்னனான பதினன்காம் லூயி!

வான்வெளியில் தன்னிகரில்லாமல் தனியரசோச்சும் ஆதவனேடு ஒப்பிட்டுப் பேசப்பட்டவன் லூயி. ஐரோப்பாவில் லூயி மன்னனின் பெயர் கேட்டு, அடங்கி அடிபணியாத மன்னனில்லை. விரிந்துவரும் நாட்டின் எல்லைகண்டு, ஐரோப்பிய மண்டிலமே அஞ்சிவ் திர்த்துக்கொண்டிருந்தது. அழகு மிகு மங்கையரும், ஆற்றல்மிக்க ஆட்சி நிபுணர்களும், இலக்கிய மேதைகளும், கலைவடிக்கும் சிற்பிகளும் புடைசூழ, அரியணையில் வீற்றிருந்து, பாரிஸ் நகரமே பாருக்கு எத்துறையிலும் வழிகாட்டி எனக் கண்டோர் வியக்கும் வண்ணம் எழுபத்திரண்டு ஆண்டு காலம் ஆட்சிபுரிந்து, உலகப்படத்தில் பிரஞ்சு நாட்டை ஒளிவீசச் செய்தவன் அவன்.

ஔரங்கசீப்பினுடைய ஆட்சிக்குப் பன்னிரண்டு வருடம் முன்பாக ஆரம்பித்து, அவருடைய ஆட்சி முடிந்து ஏட்டு வருடம் பின்பாகவே லூயி மன்னனின் ஆட்சி முற்றுப்பெற்றது. ஔரங்கசீப் ஐம்பத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். உலக வரலாற்றில் வேறெந்த மன்னனும் லூயி மன்னனைப் போல் அவ்வளவு நீண்டகாலம் ஆட்சி செய்தது கிடையாது!

ஈரமில்லையா?

★

சிந்து 'கங்கை' நதிக்கரையிலிருந்து ஓடி வந்தவர்களுக்கு இப்போதுபோல் அகதிப் பட்டம்; ஆயிரக் கணக்கில் மான்யம்; அரசாங்கத்தின் அரவணைப்பு! இலங்கையின் மலைக்காடுகளிலிருந்து ஓடிவரும் இலங்கைத் தமிழருக்கு உண்டா? இல்லை யில்லை; அவர்கள் உருவம்தென்னகத்தவரான தால் சதைக் கொழுப்பு மூடியுள்ள வடவர் கண்களுக்குத் தெரிவதில்லை; எம் திருநாட்டின் குடிமக்கள் தான் வாரீர்! என்றுவது அழைக்கும் மனித மனமுண்டா இந்த அரசுக்கு?

அந்த ஈரமற்ற செய்கையால் ஈழத்திற்கும் இந்நாட்டிற்கும் நடுவே சிக்கித் தவிக்கும் பிரஜா உரிமையுள்ள தமிழர்கள் எத்தனை தெரியுமா?

7,60,000 தமிழர்கள்!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

47. பதினன்காம் லூயி

எத்துறையும் சிறக்க ஆட்சி செய்த லூயி மன்னனின் திறம் கண்டு, ஐரோப்பிய நாடுகள் பொருமின; பொருமையால் புழுங்கின. வளர்ந்துவரும் லூயியின் செல்வாக்கு ஏற்படுத்திய அச்சம், சிதறிக்கிடந்த ஐரோப்பிய நாடுகளை ஐக்யமடையச் செய்தது.

1638-ல் பிறந்த லூயி ஐந்தாவது வயதில் அரியணை ஏறினன். அவனுடைய இளமைப் பருவம் கழியும்வரை அவனுடைய தாய் ஆன், ரீஜன்டாக இருந்து நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வந்தாள். ஆனாலும் அதிகாரமெல்லாம் பிரான்ஸ் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த கார்டினல் மெசாரின் கையிலேயே இருந்தது. 1660-ம் ஆண்டு, லூயி, ஸ்பெயின் நாட்டு மன்னனுடைய மகள் மேரியா தெரிஸா என்பவளை மணந்துகொண்டான்.

லூயியிக்குத் திருமணமான ஓராண்டிலேயே பிரதம மந்திரி மெசாரின் மாண்டுபோனர். அவர் இறந்தபொழுது லூயியின் வயது இருபத்து மூனறு. நாட்டு நிர்வாகப் பொறுப்பு அனைத்தையும் மன்னனே ஏற்றுக்கொணடான். அதற்குப் பிறகு பிரதம மந்திரி என்ற ஒரு ஸ்தானத்தையே லூயி ரத்து செய்துவிட்டான். முழுமையான அதிகாரம் பெற்ற சர்வாதிகாரியானன்!

லூயி கெட்டவனல்ல; பேராசைக்காரன். பிரஞ்சு நாட்டிற்கு உன்னத அந்தஸ்து ஏற்பட வேண்டுமென்று அல்லும் பகலும் அயராது உழைத்தான். ஆற்றல் மிக்க அவனுக்கு ஆட்சிப் பொறுப்பில் துணைபுரியப் பல பேரறிஞர்கள் இருந்தனர். விசுவாசத்துடன் அவர்கள் அவனுக்கு ஊழியம் செய்தனர்.

பொருளாதார நிபுணன் கோல்பர்ட், பிரஞ்சு நாட்டின் பொருளாதார நிலையைப் புனருத்தாரணம் செய்தான். லயோன் என்ற தலைசிறந்த ராஜதந்திர ஐரோப்பிய நாடுகளைத் தன் அரசியல் மதியூகத்தால் வளைத்துப் போட்டான். டூரேன் என்ற தளகர்த்தன் போர் வியூகங்கள் வகுப்பதில் தலைசிறந்த நிபுணனக விளங்கினன். குதிரைப் படைத் தலைவன் காண்டேயின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே ஐரோப்பிய வீரர்கள் அஞ்சி நடுங்கினர். தளபதி வாவ்பான், பாதுகாத்த கோட்டை பறிபோனதுமில்லை; தாக்கிய கோட்டை தஞ்சமடையாமல் இருந்ததுமில்லை!

லூயி தன்னுடைய ஆட்சியில் பிரஞ்சு நாட்டுக்கு உன்னத வாழ்வளித்தான். கோல்பர்ட்டின் உதவியுடன் வரி முறைகளை சீர்திருத்தம்செய்தான். தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. இறக்குமதிப் பொருட்களின் விலை நிர்ணயிக்கப்பட்டது. உள்நாட்டுத் தொழில்களுக்கு மான்யங்கள் வழங்கப்பட்டன. வியாபாரப் பொது நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. போக்குவரத்துச் செய்தி இலாக்காக்கள் செம்மைப்படுத்தப்பட்டன. கடற்படைபலப்படுத்தப்பட்டது. நீதி நிர்வாகம் அரசனின் நேரடிப்பார்வையின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. போலீஸ் இலாகா ஒழுங்கான முறையில் அமைக்கப்பட்டது.

அதுமட்டுமா? கலைத்துறையிலும் அறிவியல் துறையிலுங் கூட லூயி தன் முழு கவனத்தையும் செலுத்தினன். இசைக் கழகமும் விஞ்ஞானக் கழகமும் அரசனுடைய ஆதரவில் தோற்றுவிக்கப்பட்டன. கற்பனைக் கதைகள் புனைவதில் ஒப்பிலாக் கலைஞன் லா:பான்டேன், இலக்கியமேதை ரசீன், நாடக மேதை மோலியர் போன்ற இலக்கியப் பேராசிரியர்களெல்லாம் லூயியின் காலத்தில் வாழ்ந்தார்கள்.

மேரியா தெரிசாவைத் திருமணம் செய்துகொண்ட லூயி பிரஞ்சு நாட்டின் பேரழகிகள் பலரைத் தன் காமக் கிழத்திகளாக வைத்திருந்தான். அவர்களில் மேடம் வாலியர், மேடம் மான்டிஸ்பன், மேடம் மெயின்டினன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். முன்னிருவரையும் அரசியோடு சமமாக வைத்து ராஜபவனியில் அழைத்துச்செல்வானும். பிரஞ்சு நாட்டுக்கு ஒரு அரசனும் மூன்று அரசிகளும் இருப்பதாக மக்கள் வேடிக்கையாகப் பேசிக்கொள்வார்களாம். மூன்றுமவளான மெயின்டினன், தாதியாக அரண்மனையில் நுழைந்து, மன்னனின் மனைவி மேரியா தெரிசா இறந்தவுடன், தாரமாக மாறியவள். மெயின்டினனைத் திருமணமே செய்து கொண்டதாத மன்னன் அறிவித்தான். ஆனல் அந்தத் திருமணம் கடைசி வரையில் நாட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெறவே இல்லை!

வாழ்க்கையில் லூயி மன்னன் கொண்டிருந்த லட்சியங்கள் இரண்டு. பிரஞ்சு நாட்டு எல்லையைப் பெருக்கி அரசியல் செல்வாக்கைப் பெருக்குவது ஒன்று; தன்னுடைய தலைநகரை — அரண்மனையை — செல்வ பூமியாக — சிங்காரபுரியாக ஆக்கி மகிழவேண்டுமென்பது மற்றொன்று. இந்த இரண்டு காரியங்களுக்கும் ஏராளமாகப் பொருள் தேவைப்பட்டது.

முதல் லட்சியம் நிறைவேற ஆட்சிக் காலம் முழுவதும் லூயி மன்னன் போர்புரிந்துகொண்டே இருந்தான். அவன் நடத்திய போர்களால் பிரஞ்சு நாட்டின் பொருளாதாரம் சீர் குலைந்தது. அதைச் செம்மைப்படுத்த கோல்பர்ட் தீட்டிய திட்டங்களெல்லாம் விழலுக்கிறைத்த நீராயின.

இரண்டாம் லட்சியம் நிறைவேற ஏராளமானசெல்வத்தைச் செலவழித்து, பளிங்கு மாளிகைகளும், கலையின் திறம் பேசும் கட்டிடங்களும் நிறையக்கட்டி, பாரிஸ் நகரை கலைத்தேவதையின் இருப்பிடமாக்கினன். பாரிஸ் நகருக்கு அருகிலுள்ள வெர்சேல்ஸ் என்ற இடத்தில் இரண்டு கோடியே நாற்பது லட்சம் பவுன் செலவில் கலை மாளிகை யொன்றைக் கட்டி முடித்தான். 1914–18-ம் வருடங்களில் நடந்த முதலாம் உலகப் போர் முடிவடைந்தவுடன், இந்த மாளிகையில்தான் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று என்பதும், அதனுலேயே அதற்கு வெர்சேல்ஸ் உடன்படிக்கை எனப்பெயர் வந்தது என்பதும் நீ அறிந்திருக்கக் கூடும்.

லூயி மன்னனின் பெரும்படியான செலவுகளால் அரசாங்க கஜானு காலியாயிற்று. லூயி மன்னனுக்கு எதிராகப் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து உட்பட அணிவகுத்தன. திறம்மிக்க ஆங்கிலத் தளபதியான மால்ப்ரோ பிரபு (ஜான் சர்ச்சில் என்பது அவருடைய பெயர். ஆங்கிலப் பிரதம மந்திரியாக இருந்த வின்ஸ்டன் சர்ச்சிலின் பாட்டன்) லூயியின் படைகளைத் தொடர்ந்து பல போர்களில் தோற்கடித்தார்.

லூயி மன்னனின் ராஜதந்திரமற்ற மதக்கோட்பாடு, பிராடஸ்டன்ட் மதத்தைச் சேர்ந்த 'ஹியூ கோனட்ஸ்' என்பவர்களை நாடு பெயரச் செய்தது. பிரஞ்சு நாட்டுத் தொழில் துறையின் மூலபலமாக—முதுகெலும்பாக—விளங்கியவர்கள் அவர்கள். அவர்களுடைய வெளியேற்றத்தால் பிரஞ்சுத் தொழில் வளம் மங்கியது. கோல்பர்ட்டின் திட்டங்கள்கூட பிரஞ்சு நாட்டைக் காப்பாற்ற முடியவில்லை. ஏழைகளும் மத்தியதர வர்க்கத்தினரும், மன்னனும் பிரபுக்களும் வாழ்வதற்காகவே வாழ்கிருர்கள் என லூயி மன்னன் எண்ணினன். ஆடம்பரம் ஒரு புறமும் அவதி மற்ருேர் புறமும் வளர்ந்தன! லூயியின் சர்வாதிகாரப் போக்கால், மக்கள் அரசியல் சுதந்திரம் இழந்தனர்; அவனது ஆடம்பரம் பொருளாதார நலிவை ஏற்படுத்தியது; அவனது பேராசை முடிவில் தோல்வியை ஏற்படுத்தி, பிரஞ்சுக்காரர்கள் காலனிகளை இழக்கும் இழிநிலையை உண்டாக்கியது.

உடையா, உணவா, அலங்காரமா, கலையா — எதிலுமே ஐரோப்பிய மக்கள் பிரான்சு நாட்டை முன் ம திரியாகக் கொண்டனர். வளமையின் சிகரத்துக்கு பிரஞ்சு நாட்டை அழைத்துச் செல்ல முயன்று, அதில் ஓரளவு வெற்றியும் கண்ட லூயி, 1715-ல் அவன் இறந்தபோது, வறுமையின் விளிம்பிலே அதை விட்டுவிட்டுச் சென்றுன். மாதவி, பிரசித்தி பெற்ற பிரஞ்சுப் புரட்சிக்கு வித்தூன்ற அங்நிலம் பண்பட்டிருந்தது!

அன்புள்ள,

அகத்தியன்.

செந்தமிழைத் தாக்கும் செத்த மொழிப் பிரியர்கள்!

மாநாடு நடத்தினர்கள்!

மாத்தமிழின் சல்லிவேரைக் கொய்துவிட, மாண்டுவிட்ட வடமொழிககு மகுடம் சூட்ட சென்ற சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாநாடு நடத்தினர்கள்.

ஆம்; சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற திரைக்குப் பின்னே தாழ்வுற்ற வடமொழிக்கு வாழ்வு தர சதி நாடகம் நடத்தியிருக்கிருர்கள்.

கோலாகலமான ஊர்வலம், கொட்டுமுழக்கு, கேடயங்கள் பரிசு தருதல், நெய்யுணவு, நீண்ட சொற்பொழிவுகள் — இன்னும் பலப்பல நிகழ்ச்சிகள் ராஜாஜி மண்டபத்தில் நடந்த 'வடமொழிப்பிரியர்'களான தமிழ் எழுத்தாளர் சங்க விழாவிலே நடைபெற்றன.

திறப்பாளர், தலைவர் ஆகியோரின் சொற்பொழிவுகள் எல்லாம் தமிழுக்குச் செய்துவிட்ட வஞ்சகத்தை மறைக்க, தங்களுக்குப் பிரியமான வடமொழியை வளர்க்கும் விதத்திலேயே அமைந்திருந்தன!

திறப்பாளர் என்பவர் கூறினர், சொல்லலங்கார சிருஷ்டிகள் வேண்டாமென்று! சங்கத்தலைவர் கூறினர், இனத்துவேஷம் கூடாதென்று!

இப்படிப்பட்ட ஒருதலைப் பட்சமான உபதேசம் முழுதும் நம்மவருக்காம்! ஆம்;எண்ணற்ற எழுத்தாளர்களையும், ஒப்பற்ற எழுத்து வேந்தர்களையும் தன்னகத்தே கொண்டு, தென்னகத்தின் நல்வாழ்விற்கு ஒரு 'எழுத்தில் காட்டுவதேன்?—என்ற கண்டனக் கணைகளைத் தொடுக்கிற இவர்கள் துவேஷம் துளியுமில்லாதவர்களா? பிரிவு மனப்பான்மையற்றவர்களா? ஒற்றுமையே உருவானவர்களா?கட்சிக் கருத்தை எழுத்தில் காட்டாதவர்களா? —என்ருல், இல்லையில்லை!

துவேஷம், ஒற்றுமையின்மை ஆகியவற்றின் மொத்த உருவே இவர்கள்தான்!

ஏனெனில், தமிழ் மாநிலத்திற்கே ஒரு சங்கத்தை உண்டாக்கத் திறனற்ற இவர்கள் — அந்த முயற்சியிலே ஈடுபட்டு துவேஷ எண்ணங்களாலும் — ஒற்றுமையின்மையாலும் தோல்விகண்ட இவர்கள்தான் குற்றம் சாட்டுகிருர்கள்!

கட்சிக்கருத்தை எழுத்தில் காட்டுவது தவறு — என்று ஓங்காரக் கூச்சலிடும் இந்த எழுத்தாளர்கள்தான் இப்போது நடந்த மாநாட்டில் ஒரு 'பச்சை அரசியல்வாதி'க்குக் கேடயம் தந்து மகிழ்ந்தார்கள்!

கேடயம் அவருக்குத் தருவது பற்றி நமக்கு வருத்தமில்லையென்ருலும், அரசியலைக்கண்டு ஏதோ தூர விலகுவதுபோல் நடித்துக்கொண்டிருக்கும் இவர்களின் உண்மை வேடத்தை அறிந்துகொள்ளுகிருேம்.

திரு- டி. எஸ், சொக்கலிங்கம் எனும் காங்கிரஸ்காரருக்கு — கழகத்தவர் என்ருல் கடும்புலிபோல் பாயும் அந்த அரசியல்வாதிக்கு —அரசியல் கலந்த எழுத்தைத் தவிர வேறென்றும் அறியாத

தமிழில் வடமொழிச் சொற்கள் கலந்து வருவது தமிழைச் சிறப்பிக்கவே எனவும், வடமொழிச் சொற்களை வேண்டுமென்றே நீக்கி எழுதியதே மறைமலை அடிகளாரின் எழுத்து — என்றும் ஆராய்ந்து அருளியிருக்கிருர். ஆனல், இந்தத் 'தேசிகரின்' ஆராய்ச்சியைத் தமிழ்நாடறியும்.

சிலப்பதிகாரத்தைக் காவியம் அல்லவென்று செப்பிய செம்மல் இவர்தான்!

குறள், வடமொழி வேத நூற்களின் சாரம்தான் எனும் 'பித்துக்குளி'க் கூற்றினை கூறியவர் இவர்தான்!

எனவே சாக்கடையிலிருந்து சந்தன மணத்தை எதிர்பார்க்கும் வழக்கமில்லை என்ருலும், அவருடைய தன்னம்பிக்கை மறைமலையடிகளாரைத் தாக்குமளவிற்குச் சென்று விட்டது கண்டு வேதனைப்படுகிருேம்! ஆம்; மறைமலையடிகளாரின் தமிழை ஏசியிருக்கிருர், தமிழகம் அறியா இந்தத் 'தமிழ்மேதை'!

"அவரும் ஒரு தமிழரா; அதுவும் உரை நடைதாஞ?" எனக் கேட்டாராம் இவர்!

உடனே தமிழுணர்ச்சி கொண்ட ஒரு சிலர்—தப்பித் தவறி, தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் சிக்கிக் கொண்ட சிலர் ஆத்திரமுற்றனர்; தமிழுக்குப் புத்துயிர் ஊட்டியவரின் எழுத்து நடையைப் பழிப்பது கண்டு பொங்கியெழுந்தனர்.

பொங்கும் அந்த உணர்ச்சி

தாளர் பட்டாள'த்தையே உருவாக்கி வைத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தான் தாக்கியிருக்கிருர்கள்!

சொல்லலங்காரம்—ஏதோ இந்தக்காலத்தில் 'தி. மு. க.' எழுத்தாளர்கள் தோன்றியபிறகு உண்டாகிய ஒன்றல்ல; அது தமிழ் இலக்கண பகுப்புக்களுள் ஒன்று. உண்மையை — எடுத்துக் கொண்ட பொருளை விளக்கிடப் பயன்படும் ஒரு நல்ல கருவி — என்று தமிழறிந்தோர் கூறுவதை இந்த வடமொழிச் சாக்கடையில் ஊறிக் கொண்டிருப்போர் அறிய மாட்டார்கள்.

அந்தத் தமிழ் மரபின் வழிவழி வந்த தி. மு க. எழுத்தாளர்களின் ஒப்பற்ற சிருஷ்டிகளைத்தான் ஆபாசக் கவிஞன 'காளிதாசனின் தாசர்கள்' கண்டனம் புரிகிருர்கள்.

சொல்லை அடுக்கடுக்காக ஆளத் தெரியாதவர்கள், சொல்வளமில்லாத உள்ளீடற்றவர்கள்—இவர்கள்தான் சொல் வளமுள்ள நம்மைத் தாக்க ஆரம்பிக்கிருர்கள்!

சொல்வளத்தை பயனற்ற வளம் என்று திரித்துக் கூறித் திரிகின்ற இவர்கள் — இனப்பற்றை — விழ்ந்த இனம் வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தை—எம் இனத்தின் மீது எந்த இனமும் ஆட்சி செலுத்துவதை அனுமதிக்க விரும்பாத சுதந்திர எண்ணத்தை 'இனத்துவேஷம்' என்று கூறுவதற்கு அச்சம் கொண்டு கிடப்பரோ?

துவேஷம் ஏன்? — ஒற்றுமையின்மை ஏன்? — கட்சிக்கருத்தை

அந்தப் 'பாரதப்' புதல்வருக்குத்தான் தமிழ் எழுத்தாளர் சங்கம் கேடயம் வழங்கியிருக்கிறது!

ஏனிந்த அரசியல்வாதிக்குக் கேடயம்? 'தினசரி' ஒன்றை நடத்தித் தோற்றதாலேயே அவருக்கு இப் புகழென்ருல் எத்தனையோ ஆயிரம்பேருக்கு நீங்கள் கொடுத்திருக்கவேண்டுமே? அரசியல் எழுத்தைத்தவிர வேறெதுவும் தெரியாதவர்களுக்குக் கேடயம் எனருல் எத்தனையோ ஆயிரம் கேடயங்கள் கொடுத்திருக்க வேண்டுமே?

எதிர்க்கட்சிகளை— குறிப்பாக தமிழ்ப் பரம்பரையை, பண்பாட்டைக் காப்பாற்றி வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்குவதற்கென்றே கூட்டப்பட்ட மாநாடு என்பதையும் அத்தாக்குதலில் தளபதிப்பதவி வகிப்போருக்குப் பட்டம் தருவது என்பதையுமே மேற்கண்ட நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

தமிழரின் தனிப் பண்பிற்கே வேட்டு வைத்துத் தகர்க்கும் இத் திருக்கூட்டத்தின் நிகழ்ச்சியிலே ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டதாம்!

ஆம்; 'தமிழ் மொழியில் பிற மொழி கலக்கப்படலாமா?'— எனும் (அவர்களுக்குச்) சுவை மிகுந்த தலைப்பில் விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது தான் அந்த எதிர்பாராத நிகழ்ச்சி நிகழ்ந்துவிட்டதாம்!

ரா. ஸ்ரீ. தேசிகன்—எனும் ஒரு 'வடமொழித் தமிழ் எழுத்தாளர்' அந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில்,

யின் உருவமாக அப்போது காட்சியளித்தவர் டாக்டர் அ. சிதம்பரநாதனர். அவர் கேட்ட கேள்விகளே போதும், குணம் கெட்ட நாவுடையோர் வெம்பிப் புழுங்கிச் செத்திட!

"மறைமலை அடிகள் எழுதியது தமிழா எனக் கேட்பவன் தமிழனு?

"அவருடைய எழுத்தைப் புரிந்துகொள்ளும் திறனற்று — தகுதியற்று—மனப்பக்குவமும்— அத்தகு கல்வி அறிவுமற்றுமிருக்கும் சிலர் அவரது எழுத்தையே தூற்றி வாழ்வதோ?

"மறைமலை அடிகள் எழுதிய எழுத்தைப் படிக்க முடியாதவன் ஒரு எழுத்தாளனு?"

—என்று சினம் கொப்பளிக்கக் கேட்டாராம்! செத்தழிந்த மொழிக்கு சிங்காதனம் தேடித் தரப் புறப்பட்டிருக்கும் மதிகேடர்களைப் பார்த்துச் சீறினர்!

'....நமஸ்காரம்....! போஜனம் ஆயிற்ரு?' — என்பவற்றை விடாது கட்டி அழுது கொண்டிருக்கும் இந்தப் 'பிணம் தழுவும் பக்தர்கள்'—சீற்றத்தினல் மட்டுமே திருந்தக் கூடியவர்களல்லர்!

நம்மவர்கள் கூட்டுறவு, அவர்களின் கையைப் பலப்படுத்தும் வரை, வடமொழிப் பித்தம் அவர்கள் மண்டையிலிருந்து இறங்காது; சித்தம் திருந்தாது! மாருக, மடிமீது கிடத்தி வளர்த்த தாய் சொல்லித் தந்த மொழியையே, மாநாடு கூட்டி மானபங்கப்படுத்துமளவிற்கு 'பிணப் பொருள்' அவர்களின் இதயக் கூட்டில் குவிந்து வளரும்! ::

ஆகாய மாளிகை; அடிக்கல் இல்லை!

சென்னை மாநிலத்தில் தான் இது நடந்தது!

கிராமப் பஞ்சாயத்தைச் சார்ந்த நிலத்தில் தொழிற்சாலை ஒன்றைத் துவக்கத் திட்டம் போட்டார், ஒரு வசதி படைத்த முதலாளி!

துவக்கவிழாவிற்கு டில்லி மந்திரியை அழைத்தனர்! மத்திய அரசைச் சார்ந்த தொழில் மந்திரி அங்கு வந்து அத் தொழிற்சாலையை துவக்கிவைத்தார்! மாநில அமைச்சரும் வந்திருந்தார்.

'தொழிலை ஆரம்பித்தவரின் துணிவைப் பாராட்டுகிறேன்; போற்றுகிறேன்!'— என்றுமந்திரிகள் புகழ்மாலை சூட்டினர்கள் முதலாளிக்கு!

இப்படி புகழ்மாலை பெற்ற முதலாளி தொழிற்சாலைக்குரிய லைசென்ஸ் வாங்கிக் கொண்டாரா? — இல்லை; வாங்கவில்லை!

'தொழிற்சாலைக்குரிய இடம் அதுவல்ல!

'குடியிருப்போர்' அங்கு அதிகம்!

'ஆகவே, லைசென்ஸ் தர இயலாது' — என்று கூறிவிட்டனர், அந்தக் கிராமப் பஞ்சாயத்தார்கள்.

பணம் பாதாளம் வரை பாயுமல்லவா?—பணக்காரர் சொல் குறைந்த அளவு மந்திரிசபை வரையாவது பாயுமல்லவா?

எனவே, கிராமப் பஞ்சாயத்து அதிகாரி, மேலதிகாரியால் அவசர அவசரமாக அழைக்கப்பட்டார், தொலைபேசிமூலம்!

'தொல்லை கொடுக்காதீர்கள், தொழிற்சாலைக்கு!'— என மொழிந்தார்; மிரட்டல் கொஞ்சம்அதில் கலந்திருந்தது!

பஞ்சாயத்து அதிகாரி மௌனமானுர்!

அத்தோடு போயிற்ரு? மாவட்ட சுகாதார இலாகாவின் துணை அதிகாரி ஒருவர் தொழிற்சாலையைப் பார்வையிட்டார்.

'தொழிற்சாலை குடியிருப்புப் பகுதியில் இருக்கிறது.

'தொழிற்சாலையைச் சுற்றிலும் குடிசைகள் பல உள்ளன.'

'எனவே, இத்தொழிற்சாலைக்கு 'லைசென்ஸ்' தர முடியாது'--என அறிவித்து விட்டார், அவர்!

என்ருலும், முதலாளிகள் மாவட்ட சுகாதார அதிகாரியை முற்றுகையிட்டனர்! பலனும் கைமேல் கிட்டியது! உடனே அந்த அதிகாரி அத்தொழிற்சாலையிருக்குமிடத்தை 'தொழிற்பிரதேசமாக்க' சிபார்சு செய்தாராம், மேலிடத்திற்கு!

இப்போதுகூட அந்தத் தொழிற்சாலைக்குலைசென்ஸ் கிடையாது! சட்டத்தை உடைத்தெறிந்த அந்தத் தொழிலகம், சட்டத்தைக் காக்க வேண்டிய அமைச்சர்களின் மனப்பூர்வமான ஆசியோடு நடைபெறுகிறது!

சென்ற இதழில் :

தாமரை வந்து அழைத்துப் போவாள் என அருவிக்கரையில் காத்திருந்தாள், ஆண் உடையிலிருந்த முத்துநகை. தனிமை அவளை என்னென்னவோ எண்ணச்செய்தது.

வானம் இருண்டு, இடியிடித்தது! முத்துநகையும் மரத்திலிருந்த பறவைகளைப்போல் ஒலி முழக்கம் செய்தாள். கடைசியில் ஆணைப்போல் பேச முயற்சித்தாள். விரைவில் வெற்றியும் கண்டாள். இப்போது அவளால் ஆண்குரலில் பேசமுடியும். ஆனால் தொண்டைதான் கொஞ்சம் வலித்தது. தன் லட்சியத்தை நினைத்து அதைப் பொறுத்துக்கொண்டாள்.

அதற்குள் விறகு வெட்டியின் நினைவு அவளுக்கு வந்தது. பாழ்மண்டபத்தில் தன்னுள்ளம் பறிபோனதுபற்றி நினைத்துப்பார்த்தாள். அப்போது மரத்திலிருந்து விழுந்துவிட்ட கிளைமீது சாய்ந்த அவள் ஏதோ இன்பத்தில் ஆழ்ந்தது போல் 'கணநேர' மயக்கமுற்றாள்.

மறுபடியும் உள்ளத்துக் கண்ணாடியில் விறகுவெட்டியின் நிழலாட்டம்! லட்சிய முத்துநகைக்கும், காதல் முத்துநகைக்கும் கடும் போராட்டம்! 'உன் லட்சியம் என்ன ஆயிற்று? காதல் குறுக்கிட்டதும் கருகி மண்ணாயிற்றோ?' — என்று கிண்டல் புரிந்தாள் லட்சிய முத்துநகை. காதல் முத்துநகையோ கண்களை மூடிக்கொண்டாள்.

எங்கிருந்தோ ஒரு சப்தம்! 'டக் டக்'—என்ற ஒலி! எழுந்து ஓடிப்பார்த்தாள் முத்துநகை. ஆம்; யாரோ ஒரு ஆள் மரம் வெட்டிக் கொண்டிருந்தான். அவன் திரும்பி நின்றுகொண்டிருந்ததால் அடையாளம் தெரியவில்லை. இதற்குள் மரமே முறிந்து முத்துநகை இருக்கும் பக்கம் விழுந்தது! கூச்சலிட்டபடியே சாய்ந்தாள்; மரம் வெட்டியவன் ஓடிவந்து அவளைக் கைதூக்கி விட்டான்.

அவன் வேறு யாருமில்லை, முத்துநகையின் உள்ளம் கவர்ந்த விறகுவெட்டி வேடத்திலிருக்கும் இருங்கோவேள்தான்!

அவனுடைய தங்கை தாமரை முத்துநகையை அழைத்துச் செல்வதற்குமுன் சந்திக்க நினைத்த இருங்கோவேளின் எண்ணம் நிறைவேறிற்று!

மழையோ பெய்துகொண்டிருந்தது. எனவே, மண்டபத்திற் கழைத்துப்போனான் இருங்கோவேள், முத்துநகையை!

ஆண் உடை பூண்ட பெண்தான் இவள் என அறிந்த இருங்கோவேள் அவளுடன் விளையாட ஆரம்பித்தான். அவளோ மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது விழித்தாள்.

பின்னர் படுத்துறங்கும்போது முத்துநகையின் காலடியில் ஊர்ந்த ஒரு பாம்பு, இருங்கோவேளை அவள் பயத்தால் தழுவும்படி செய்துவிட்டது.

இந்த ரசமான நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, தீப்பந்தத்தின் அருகிலேயே இருவரும் படுத்துக் கொண்டனர். "குளிருதய்யா; உன் தலைப்பாகையைக் கொடு" —என்று இருங்கோவேள், குறும்புடன் முத்துநகையின் தலைப்பாகையை அவிழ்க்க ஆரம்பித்தான்........

★ ★ ★

12

காதல் மலர்ந்தது

அதற்குமேல் முத்துநகையால் தடுக்க முடியவில்லை. அவனை அறவே வெறுத்திருந்தால் இப்படியொரு நிலைமை ஏற்பட்டே இருக்காது. முதல் சந்திப்பிலேயே முகத்தை முறித்துப் பேசிவிட்டுப் போயிருப்பாள். இப்போதோ இரண்டுங் கெட்டான் நிலை! அவிழ்ந்த தலைப்பாகை அவன் கையிலே! அலைஅலையாய்ச் சுருண்டு அடர்த்தியாகத் தொங்கும் கூந்தல் அவள் தலையிலே! முன்பே இது அவனுக்குத் தெரியும் என்றாலும் இப்போதுதான் தெரிந்தவனைப்போல "ஆ!" என்று வியப்புச்சொல் உதிர்த்து விட்டு அசையாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளும் இனிமேல் நடிக்க இயலாது என்பதைப் புரிந்து கொண்டாள். என்னதான் இரும்புக் கம்பியை நட்டுவைத்து அதன்மீது ஏற்றிவிட்டாலும் கொடி, துவண்டு துவண்டு நெளிந்து நெளிந்து படருமே தவிர கம்பீரமாக ஆண்மை காட்டி நிற்குமா என்ன?

இருங்கோவேள் நடிப்பின் உச்ச கட்டத்தை எட்டிப்பிடித்தான். "என்ன ஆச்சரியம்! நான் காண்பது கனவா? அல்லது கண் எதிரே மாயமந்திரம் ஏதாவது நடக்கிறதா? முத்து! நீ ஆண் அல்லவா? பெண்ணா? பெண்ணா?" என்று பரபரப்புடன் கேட்டு தான் பெரிய குழப்பத்தில் இருப்பதுபோல் பாவனை காட்டினான்.

முத்துநகை பேசவில்லை. தலை குனிந்து கொண்டாள்.

இருங்கோவேள் அருகே சென்று அவள் கன்னத்தைக் கரங்களால் பற்றித் தன் முகத்துக்கு நேரே திருப்பினான். இருவர் முகமும் அருகருகே நெருங்கின. இரு ஜோடி விழிகளும் ஒன்றையொன்று கௌவிக் கொண்டன. மூன்று விரல் இடைவெளியில் மூக்கின் நுனிகள்! பக்கத்தில் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தத்தின் ஒளி பட்டு அவள் முகம் மெருகேற்றப்பட்ட தங்கம்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மலர்ந்த தாமரையொன்றை இரு கையால் ஏந்தி அதன் எழிலைக் கண்களால் பருகுவதுபோல் அவள் கன்னங்களில் தன் கைகளைப் பதித்து அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் இருங்கோவேள்.

முத்துநகை உலகத்தையே மறந்தாள். அவன் கையிலிருந்து முகத்தை விடுவித்துக் கொண்டு அவனது அகன்ற மார்பகத்தில் சாய்ந்து கொண்டாள். இடியும் மழையும் முன்னைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாயிற்று. திடீரென சுழன்று வீசிய பெருங் காற்றில் தீப்பந்தமும் அணைந்து போயிற்று. இருவரும் இயற்கையை மனதுக்குள் வாழ்த்தினர்.

அந்த வாழ்த்துக்களைப் பற்றிக் கவலைப்படாமலே பொழுது விடிய ஆரம்பித்தது. மழை அறவே இல்லை. மெல்லிய பூங்காற்று வீசிக் கொண்டிருந்தது. இருவரும் மௌனமாக வெளுத்துவரும் ஆகாயத்தை நோக்கியவாறு அமர்ந்திருந்தனர்.

இருங்கோவேள்தான் பேசத் தொடங்கினான். வெகு நேரத்திற்குப் பிறகு பேச முயன்ற அவனுக்கு ஏதோ ஒரு உணர்ச்சி நெஞ்சை அழுத்தியது. அவளை உற்றுப் பார்த்தான். கண்கள் கலங்கியிருந்தன.

"ஏன் வாட்டமாயிருக்கிறாய்?" என அருகே சென்று கேட்டான். பதில் இல்லை.

"என்னை மன்னித்துவிடு!" என்று கெஞ்சுங்குரலில் கேட்டுக் கொண்டான. முத்துநகையோ அவனை அனுதாபத்துடன் நோக்கினாள்.

"மன்னிக்கமாட்டாயா?" என்று மறுபடியும் அவள் தோளை குலுக்கியவாறு கேட்டான்.

"நீங்கள் ஒன்றும் குற்றம் செய்யவில்லையே! எல்லாவற்றுக்கும் நான்தானே காரணம்?" என்றாள் அவள், தழுதழுத்த குரலில்!

"இல்லை — நானும்தான் காரணம; நீ ஒரு பெண் என்பதை முதலிலேயே தெரிந்துகொண்டு தான் உன்னிடம் இவ்வளவு தூரம் பழகினேன்." என்றான் இருங்கோவேள்!

"எப்படித் தெரியும் உங்களுக்கு?"

"நீ மண்டபத்துக் குளத்தில் குளிக்கும்போது..........."

—அவன் பேச்சை முடிக்கவில்லை. அவள் வெட்கத்தால் முகத்தை மூடிக்கொண்டாள்.

"அதிருக்கட்டும்—உன் உண்மைப் பெயர் என்ன?"

"முத்துநகை!'

"ஆகா! பொருத்தமானபெயர்! நீ எதற்காக இந்த உடையில் இப்படிக் காட்டில் திரிய வேண்டும்?"

"அதுதான் முன்பே சொன்னேனே; முக்கியமான லட்சியம் ஒன்று இருப்பதாக!"

"அது என்ன லட்சியம் என்று என்னிடம் விபரமாகக் கூறக் கூடாதா?"

"உங்களை யாரென்று புரிந்து கொண்ட பிறகு இனிமேல் சொன்னால் என்ன? நிச்சயம் சொல்லத்தான் போகிறேன்,"

"நான் ஒரு சாதாரண விறகு வெட்டி! அவ்வளவுதான்!"

"என்னையொன்றும் நீங்கள் ஏமாற்றமுடியாது. நீங்கள் யார் என்பதற்கு என்னிடம் ஆதாரமே இருக்கிறது!"

"ஆதாரமா?" — திடுக்கிட்டுக் கேட்டான் இருங்கோவேள்.

"இதோ! என் விரல் வீக்கத்திற்குப் பச்சிலை கொண்டுவரப் போனீர்களே; அப்போது தவறிப்போய் இந்த மண்டபத்தில் நீங்கள் விட்டுவிட்டுப்போன ஓலை!" — என்று ஒரு ஓலைச் சுருளையெடுத்து அவனிடம் நீட்டினாள்.

அதை வியப்போடு பார்த்த இருங்கோவேள், சமாளித்துக் கொண்டு, "இந்த ஓலைக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?" என்று தெரியாதவனைப்போல விழித்தான்.

"என்ன சம்பந்தமா? இதோ படிக்கிறேன் கேளுங்கள்!...

"அனுப்பியவர்:— பெருவழுதிப் பாண்டியர்.
பெறுபவர்:— பாண்டி நாட்டு
ஒற்றர் வீரபாண்டி.

ஒற்றரே! உமது ஓலை கண்டு விளக்கமறிந்தோம். நீர் குறிப்பிடும் காட்டில்தான் இருங்கோவேள் இருக்கிறான் என்பது சரியானால் அதுபற்றிய எல்லா விபரங்களையும் சேகரித்து வரவும். அவன் இருப்பிடம் — சூழ்நிலை — அவனிடமுள்ள படைவீரர் கணக்கு—இத்தனையும் தெரிந்து கொண்டு வந்து சேரவும். வெல்க முயற்சி!

—பெருவழுதிப்பாண்டியன்"

ஓலையைப் படித்து முடித்துவிட்டு, "இப்போது புரிகிறதா என்ன சம்பந்தமென்று?" எனக் கேட்டாள் முத்துநகை.

இருங்கோவேள் சிரித்துக் கொண்டான்.

"அய்யா! ஒற்றரே! இவ்வளவு அலட்சியமாகவா இந்த ஓலையைத் தவற விடுவது? இது எதிரிகள் கண்ணில் சிக்கியிருந்தால்?" என்று முத்துநகை கேலி புரிந்தாள்.

இருங்கோவேள், எதிரிகளை ஏமாற்றுவதற்காக வேண்டுமென்றே தயாரித்த பொய்க் கடிதம்—போலி மடல் — அது என்பதை முத்துநகை எப்படி உணர முடியும்? நன்றாக நம்பிவிட்டாள் என்பதைப் புரிந்து கொண்ட இருங்கோவேள், "நல்லவேளை! உன் கையில் கிடைத்ததே; கொடு இங்கே!" என்று அந்த ஓலையை அவன் வாங்கிக் கொண்டான். இருங்கோவேள், அவளை ஏமாற்றியது உண்மைதான்—ஆனால் அவளை எதிரியாகவே அவனால் கருத முடியவில்லை. அவள் அழகில் அவன் விழுந்து விட்டான். அவளும் தன்னை இதயப் பூர்வமாக நேசிக்கிறாள் எனத் தெரிந்து மகிழ்ந்தான்.

"ம்! சொல்லு உன் லட்சியத்தை!" என்றான், அவளைத் தழுவியவாறு!

"நான் சோழ நாட்டைச் சேர்ந்தவள் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"நீ சொன்ன பிறகே தெரிகிறது. தென்னகத்து மயில் என்று உன் முகம் எனக்கு முதல் சேதி சொல்லிற்று. தெண்டனிட்டேன் உன் அழகுக்கு!"

"இல்லை! என்னை அடிமையாக்கி விட்டீர்கள்!"

"பாண்டிய நாடும் சோழநாடும் நட்புக் கொண்டிருக்கிறதே தவிர ஒன்றையொன்று அடிமைப் படுத்தவில்லையே—அது போலத்தான் நாமும்!"

இந்தக் காதல் வாசகத்திற்குப் பெற வேண்டிய பரிசை அட்டியின்றி அவன் பெற்றுக் கொண்ட பிறகு, மறுபடியும் கேட்டான் உன் லட்சியம் என்னவென்று!

"உங்கள் லட்சியம் எதுவோ; அதுவே என் லட்சியம்! இருங்கோவேளின் கொட்டத்தை அடக்க வேண்டும். அவனுக்கு அனுசரணையாகச் சோழ நாட்டில் உலவுகிற துரோகிகள் சிலருக்கு நல்லறிவு புகட்ட வேண்டும். செழியனின் உயிருக்கு ஆபத்து எதுவுமின்றி மீட்க வேண்டும்."

இருங்கோவேள் ஒரு வெற்றுச் சிரிப்பை வெளிப்படுத்தி விட்டு அவள் பேசுவதை கவனமாகக் கேட்டான்.

"செழியனை ஆபத்தின்றி மீட்பதில் நீங்கள் அக்கரை காட்டப் போகிறீர்களா இல்லையா?" என முத்துநகை கேட்டாள்.

"இருங்கோவேள் வீழ்ச்சியிலே தான் எல்லாம் அடங்கியிருக்கிறதே!" என்றான் இருங்கோவேள்.

"இருந்தாலும் செழியனை ஆபத்தின்றி மீட்க வேண்டும். அதுவே என் முதல் வேலையாகக் கருதுகிறேன்."

"முத்துநகை! செழியன் மீது உனக்கு ஏன் அவ்வளவு அக்கரை?" என அவளிடம் கேட்டுவிட்டுப் பதிலை எதிர்பார்த்தான் அவன்.

"இருங்கோவேளின் தளபதியுடன் போரிட்டு வென்ற பிறகு உடம்பிலே பட்ட காயங்களுக்கு எங்கள் வீட்டில் தான் மருந்து போட்டோம். அவரைப் போன்ற நாட்டுப் பற்றுக் கொண்டவர்களைக் காப்பாற்ற வேண்டியது பொறுப்பு மிகுந்த செயலல்லவா? செழியன் மிகவும் நல்லவர். உத்தமத் தமிழர். அவரில்லாவிட்டால் அந்தப்படுபாவி இருங்கோவேளின் எண்ணப்படி கரிகாலரின் உயிர் போயிருக்கும்." என முத்துநகை பதில் கூறினாள்.

அவளது பேச்சில் இலட்சிய வெறி தலைதூக்கியது. அதை இருங்கோவேள் ரசித்தான் என்றாலும் தனக்கு எதிரே தன்னைத் திட்டும்போது அதைப் பொறுத்துக்கொள்வதை சற்று சிரமமாகவே கருதினான்.

"இந்த ஆபத்தான வேலைக்கு நீ வந்திருக்கவேண்டாம், முத்துநகை! இப்போதும் ஒன்றும் ஆகிவிடவில்லை. உன் வேலையையும் சேர்த்து நானே பார்த்துக் கொள்கிறேன். நீ நிம்மதியாக வீட்டில் இருக்கலாம்!" என்று கூறினான்.

"அய்யய்யோ! காலம் கனிந்து வரும்போது, காரியம் கைகூடும் போது தடுக்கப்பார்க்கிறீர்களே! நான் இருங்கோவேளின் கோட்டைக்குள்ளேயே நுழையப்போகிறேன்." என்றாள், முத்துநகை உற்சாகத்தோடு!

"எப்படி முடியும் உன்னால்?"— இது இருங்கோவேளின் கேள்வி.

"முரட்டு இருங்கோவேளுக்கு ஒரு முட்டாள் தங்கை இருக்கிறாள். தாமரையென்பது அவள் பெயர். அழகிதான்! கதிரவனைக் கண்டு மலரவேண்டிய அந்தத் தாமரை சந்திரனைக்கண்டு மலர்ந்துவிட்டது, ஏமாந்து போய்!"

"புரியவில்லையே எனக்கு!"

"என் வேடத்தை நம்பி என்னை ஆண் என்று கருதி, என்னைக் காதலிக்கத் தொடங்கிவிட்டாள்."

"ம்! அப்புறம்?"

"அப்புறமென்ன — அவளிடம் திறமையாக நடித்து, அவள் உதவியினாலேயே இருங்கோவேள் மாளிகைக்குள் நுழைவதற்குத் திட்டம் தீட்டிவிட்டேன். இன்று காலையில் அவசியம் வந்துவிடுவாள்!"

"ஓகோ! நீ மிகவும் திறமைசாலிதான்! ம்–இயற்கை உனக்கு உதவி செய்கிறது! நீ ஆண் வேடம் போட்டால் நம்புவார்கள். நான் பெண் வேடம் போட்டால் யார் நம்பப்போகிறார்கள்?" எனக்கூறி அவன் சிரித்தான். அவளும் சேர்ந்துகொண்டு சிரித்தாள். சிரிப்பினூடே இருவரும் இதழ் பரிமாறி மெய்மறந்தனர்.

"நேரமாகிறது; தாமரை வந்துவிடுவாள். நான் புறப்படுகிறேன்!" எனக்கிளம்பினாள் முத்துநகை.

"ஜாக்ரதை! இருங்கோவேள் மிகவும் கொடியவன், அவன் கையில் சிக்கினால் உன்னிடம் தவறாக நடந்துகொள்ளவும் தயங்கமாட்டான் படுபாவி!" என்றான் அவன்.

"அவனா? அந்தப்பாதகனா? என் பிணத்தைக்கூட அவன் தொடுவதற்கு வாய்ப்புத் தரமாட்டேன். நீங்கள் என்னைப் பற்றிக் கவலையே கொள்ளவேண்டாம். நீங்கள் பாதுகாப்பாக நடந்து கொள்ளுங்கள்—நான் வருகிறேன்."

"மறுபடியும்?"

"இதே இடத்தில் சந்திக்கலாமா?"

"எப்போது?"

"நீங்களே சொல்லுங்கள்."

"வரும் முழு நிலா அன்றைய தினம்!"

"கட்டாயம் வருவேன் — நீங்கள் தவறி விடாதீர்கள்."

"தவறுவேனா? அன்று இந்த இடத்தில் இரண்டு நிலாக்களை சந்திக்கப் போகிறேனே!"

இருவரும் பிரிய மனமின்றிப் பிரிந்தனர். அந்த உணர்ச்சிமயமான கட்டத்தில், தன் ஆண் வேடத்தை சரிசெய்து கொள்ளாமலே செல்லும் முத்துநகையின் பின்னால் ஓடி அவளுக்குத் தலைப் பாகையைக் கட்டி விட்டு உடைகளைச் சரிபார்த்து அனுப்பி வைத்தான் இருங்கோவேள். அவளும் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்று ஒரு கல்லில் இடறி விழுந்து பிறகு அருவிக் கரைப் பக்கம் நடையை முடுக்கினாள். இரவெல்லாம் மழையில் நனைந்த குதிரை சோர்ந்து போய் நின்றது. அருகில்சென்று அதைத் தட்டிக் கொடுத்தாள். அவள் முதுகில் யாரோ தட்டினார்கள். திரும்பினாள். தாமரை சிரித்துக் கொண்டு நின்றாள்!

முத்துநகை, பயிற்சியின்மூலம் மிகவும் சிரமப்பட்டு கற்றுக் கொண்ட ஆண் குரலைப் பயன்படுத்தினாள். "வா, தாமரை! உனக்காக எவ்வளவு நேரம் காத்திருக்கிறேன் தெரியுமா?" என்றாள்.

தாமரை, அதிசயத்து "என்ன அதற்குள் பேசிவிட்டீர்கள்" என்றாள்.

"லட்சியம் பாதிக்குமேல் நிறைவேறி விட்டது. இன்னும் கொஞ்சம்தான் பாக்கி!" என்றாள் முத்துநகை.

* கி. மனோகரன், சி. பி. சிற்றரசு தீட்டிய சுவையான கட்டுரைகளுடன் ஆகஸ்டு இதழ் வெளிவந்துவிட்டது!
* செப்டம்பர் இதழ் "அன்னையின்" சிறப்பு மலராக பவனி வரவிருக்கின்றது!

"அன்னை"

தேன்சுவைக்கும்
மகளிர் திங்கள் இதழ்!
ஆசிரியர்: டாக்டர்
சத்தியவாணிமுத்து
எம். எல்.-ஏ,

விபரங்கட்கு:—
"அன்னை"
24. சி. ஹைதரித்தோட்டம்,
கிருஷ்ணதாஸ் ரோடு,
சென்னை—12.

"நீங்கள் ஊமை என்றுதான் அண்ணனிடமும் அண்ணியிடமும் கூறியிருக்கிறேன். அதனால் அங்கு வந்து ஊமையாகவே நடிக்க வேண்டும். அதோடு மருத்துவரைப்போலவும் நடந்து கொள்ளவேண்டும்."

"அய்யோ! எனக்கு மருத்துவம் தெரியாதே — என்னிடம் மருந்து ஒன்றும் கிடையாதே!"

"என் நோய் தீர்க்கும் மருந்து தங்களிடம்தான் இருக்கிறது. பரவாயில்லை; ஆபத்தில்லாத பச்சிலைகளை ஏதாவது அறைத்து அண்ணிக்கு மருத்துவம் செய்வதுபோல் நடியுங்கள் போதும்!"

"தாமரை! என்னைப்போலவே நீயும் நடிக்க வேண்டும். நாமிருவரும் காதலிக்கிறோம் என்பது யாருக்கும் ஜாடையாகக் கூடத் தெரியக்கூடாது! நெருங்கிப் பழகவே கூடாது! ஒருவரையொருவர் அடிக்கடி பார்த்து மகிழ வேண்டும். அவ்வளவுதான் காலமும் நேரமும் விரைவில் நமக்கு சாதகமாகவே அமைந்துவிடும். அதன் பிறகு நம் காதலை நிறைவேற்றிக் கொள்வோம். என்ன சரிதானா? ஏன் தாமரை, முகவாட்டம்?" என்று அவள் தலையை நிமிர்த்தினாள் முத்துநகை.

தாமரை, அவளைப் பார்த்து, "இந்தக் கடுமையான நிபந்தனையெல்லாம் இப்போதே எதற்காக? என் இஷ்டத்துக்கு விரோதமாக என் அண்ணன் நடக்கவே மாட்டார். பயப்படாமல் புறப்படுங்கள்." என்றாள் அவள் கைகளைப் பிடித்திழுத்தவாறு!

தாமரையும், முத்துநகையும் தனித்தனி குதிரைகளில் ஏறிக் கொண்டார்கள். தாமரையைத் தொடர்ந்து முத்துநகை, தன் குதிரையை நடத்திச் சென்றாள்.

அவர்கள் இருவரும் போகிற காட்சியைத் தொலைவில் உள்ள புதர் மறைவிலேயிருந்து இருங்கோவேள் கவனித்துக் கொண்டிருந்துவிட்டு, குதிரைகளின் குளம்படிச் சப்தம் மறைந்ததும் தன்னுடைய குதிரையிலேறிப் புறப்பட்டான்.

ஏ. வி. எம். மில் தயாராகும் வங்க மொழிப் படம்!

ஏ. வி. எம். ஸ்டுடியோவில் இப்போது தமிழோசையுடன் சேர்ந்து பிறமொழிக் குரல்களும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அங்கே, தற்போது தயாராகிற மூன்று இந்திப் படங்களைத்தவிர ஒரு, வங்கமொழிப் படத்தையும் உருவாக்கி வருகிறார், அதிபர் ஏ. வி. எம். பிரபல வங்கத்திரைப் பட நிறுவனத்தின் தொடர்புடன் சுடப்பட்டு வருகிறது. 'ஆகாஷ் பாதல்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்ற அந்தப் படத்தில் வங்கத்து முன்னணி நடிகையான அருந்ததி முகர்ஜி நடித்துக்கொண்டிருக்கிறார். மற்ற நடிகர்களிலும் பெரும்பான்மையோர் கல்கத்தாவிலிருந்தே வந்திருக்கிறார்கள்.

போலீசாரும் படம் எடுக்கிறார்கள்!

'போலீசார் ஈவிரக்கமற்றவர்கள்; இதயமே இல்லாதவர்கள்; சட்டத்தின் துணை கொண்டு வீதிகளிலும், விழா நேரங்களிலும் கொட்டமடிப்பவர்கள்!"—என்று பரவியிருக்கும் நச்சு நிகர் எண்ணத்தைப் போக்கி, 'போலீசார் பொதுமக்களின் அன்பர்' —என்பதை நிலைநாட்டும் திரைப்படமொன்று வெகு விரைவில் வேகமாகத் தயாராகி வருகிறதாம், ஏ. வி. எம். ஸ்டுடியோவில்!

இத்திரைச்சித்திரம், வருகின்ற ஆகஸ்ட்டு திங்கள் இறுதியில் சென்னை காவல் படையின் நூற்றுண்டு விழாக் கொண்டாட்டத்தின்போது பொதுமக்களுக்கு இலவசமாகத் திரையிட்டுக் காட்டப்படுமாம்.

போலீசாரிடம் பொதுமக்கள் பழகவேண்டிய முறைகளையும், போலீசார் பொதுமக்களிடம் பழகவேண்டிய நியதிகளையும் எடுத்து விளக்கும் இப்படத்தின் கதை வசனப் பொறுப்பினை பொதுநலப் போக்குவரத்துத் துணைக் கமிஷனர் திரு பரமகுரு அவர்களே மேற்கொண்டிருக்கிறாராம்.

வேகமாக வளரும் இதை கிருஷ்ணன்—பஞ்சு டைரக்ட் செய்கின்றார்கள். சிவாஜி கணேசன், பத்மினி, தங்கவேலு, எம். என். ராஜம், டி. எஸ். பாலையா, வி. ஆர். ராஜகோபால், சந்திரபாபு, பி. சரோஜாதேவி, சாரங்கபாணி, தேவிகா, எம். சரோஜா முதலியோர் நடிக்கின்றனராம்.

சென்னையின் பிரபல ஒளிப்பதிவாளரான மாருதி ராவ் இப்படத்திற்கென்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

சர்ச்சில் வாழ்க்கை படமாவதில் குழப்பம்!

உலகப் பெருந் தலைவர்களின் வாழ்க்கையைப் படமாக்குவதில் மேல் நாட்டுப் படத் தயாரிப்பாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனால், வின்ஸ்டன் சர்ச்சிலின் வாழ்க்கையைத் தயாரிக்க இருந்த ஒரு ஹாலிவுட் நிறுவனத்தினர் அந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டார்களாம். அதற்கான காரணத்தையும் அவர்கள் தந்திருக்கின்றனர்.

சர்ச்சில், தன் வாழ்க்கையைப் படமாக்கும் உரிமைக்காக 10,00,000 பவுன் பெற்றிருந்தார். அவரது வாழ்க்கைக் குறிப்புகளைச்சேகரித்து இரண்டு திரைப்பட எழுத்தாளர்கள் திரைக்கதையை உருவாக்கினார்கள். கடைசியில் அது சர்ச்சிலின் பார்வைக்கு அனுப்பப்பட்டபோது, அது உடனடியாகத் திரும்பி வந்துவிட்டது. திரைக்கதையமைப்பு தனக்கு திருப்தியளிக்கவில்லை என்று அவர் கூறிவிட்டாராம்.

எனவேதான், அந்த முயற்சியை முதலாளிகள் நிறுத்திவிட்டார்களாம்.

26 வயதான நாடகம்!

தினம் தினம் ஒவ்வொரு நாடகம் மேடையேறி, ஓடி மறையும் விந்தையைக் காண்கின்ற நமக்கு தொடர்ந்து 26 வருடங்கள் ஒரு நாடகம் நடந்தது என்பது விசித்திரமான செய்தியில்லையா?

"குடிகாரன்" என்ற அந்தப் பிரபல நாடகம் ஹாலிவுட் தியேட்டர் ஒன்றில் 1933—லிருந்து 1959 வரை தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது. அந்த நாடகத்தில் கதாநாயகனாக நடிப்பவருக்கு இப்போது வயது 75. அவர் நடிக்க ஆரம்பித்த போது அவரது வயது 49!

'அற்புதச் சுடருக்'கு அதிசய முயற்சி!

நம் நாட்டுத் திரைப்படங்களில் பாடத் தெரியாதவர்களுக்குப் பின்னணி இசை தருகிறார்கள். ஏன்; சரியாகப் பேசத் தெரியாதவர்களுக்குக் குரல்கூட இரவல் தருகிறார்கள்.

ஆகவே பாடகனாக நடிக்க வேண்டியவருக்குப் பாடத் தெரியவேண்டிய அவசியமில்லை. ஆனால், இந்த சுலபமான விதி முறைக்கு மாறான செய்தி ஒன்று ஹாலிவுட்டிலிருந்து கிடைக்கிறது.

பியானோ மேதையின் வேடந் தாங்கி நடிக்கவேண்டிய நடிகர் ஒருவர், பியானோ வாசிக்கவே கற்றுக் கொண்டாராம். "அற்புதச் சுடர்" என்கிற பெயர் கொண்ட அந்தப் படத்தில் டர்க் போகார்ட் ஒரு புகழ் வாய்ந்த பியானோ மேதையாக நடிக்கிறார். ஆகவே, அவருக்கு விக்டர் ஆலிர் என்ற பிரபல பியானோ வித்வான் பயிற்சி அளித்தார்.

இத்தனைக்கும் போகார்ட் தன் வாழ்க்கையில் இதுநாள்வரை பியானோவைத் தொட்டதுகூடக் கிடையாதாம்; ஆனால் இதற்கென்று தினம் ஆறு முதல் எட்டுமணிவரை பியானோ கற்றுக் கொண்டார்.

இந்தப் பயிற்சிக்கான செலவு 40 லட்சம் டாலர்! படவுலக வரலாற்றிலேயே பயிற்சிக்காக ஆன செலவில் இது மிகப் பெரும் தொகையாம்!

கதையின் கதை!

ஹாலிவுட் எம். ஜி. எம். பட நிறுவனத்தார் தயாரித்து வெளிவர இருக்கின்ற "பென் ஹர்" என்ற பிரபலதிரைச்சித்திரத்தைப் பற்றி சுவையான செய்திகள் பல கிடைத்திருக்கின்றன. ஐந்தாண்டு காலத்தில், ஒன்றரை கோடி டாலர் செலவில் தயாரான இதில் சார்ல்ட்டன் ஹஸ்ட்டன் பிரதம பாகத்தில் நடித்திருக்கிறார்.

ஆனால், 80 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட அந்தக் கதை, இன்றளவும் மக்கள் மன்றத்தின் பேரார்வமான வரவேற்பில் சிறிதளவும் இழந்ததில்லையாம்! மேலும், அக்கதையை எழுதிய ஜெனரல் லியூ வாலஸ் என்பார் ஒரு உலகம் புகழும் எழுத்தாளராக நமக்கு அறிமுகமாகிறார்.

1880-ம் ஆண்டு அந்த நாவல் அச்சாகி வெளிவந்தது. இலட்சக் கணக்கில் பிரதிகள் விற்பனையாயின. அத்தகைய புகழ்பெற்ற கதையை நாடகமாக நடிக்க வேண்டும் என்ற ஆவலில் அநேக பிரபல நாடகக் குழுவினர் எழுத்தாளருடைய வீட்டை முற்றுகையிட்டனர். ஆனால், ஜெனரல் வாலஸ் அனுமதி தர மறுத்துவிட்டார். கடைசியில் நீண்டகாலப்போராட்டத்திற்குப் பிறகு, 'கிளார் எர்லாங்கர்' என்ற பழம்பெருமை வாய்ந்த நாடக மன்றத்தினர் அந்த அனுமதியைப் பெற்றனர்.

ஆனால், அவர்கள் ஜெனரல் வாலசோடு அன்று செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து உலகமே வியந்தது. 'பணம் கொட்டும் ஒப்பந்தம்' என்று ஏடுகள் விமாசித்தன. அதாவது நாடக வசூலில் 5 சதவீதத்தை நாடக ஆசிரியருக்குத் தந்துவிட வேண்டுமென்று ஜெனரல் வாலஸ் ஒப்பந்தம் செய்து கொண்டார்!

நாடகம் நடிக்கப்பட்ட பிறகு அக்கதைக்கு இன்னும் மதிப்பு அதிகமாயிற்று. மறுபடியும் 1913-ல், ஒரு அமெரிக்க நூல் வெளியீட்டகம். 10 இலட்சம் பிரதிகள் வெளியிட்டு விற்பனை செய்தனர். உலகம் முழுவதும் அந்த நாவல் படிக்கப்பட்டது; பாராட்டப்பட்டது!

1921-ல் அதைப்பேசாப்படமாக எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். 4 இலட்சம் டாலர் செலவிலே படம் எடுக்கும் வேலை முடிந்தது. ஆனால், உரிமைக்காக நாடக ஆசிரியருக்குக் கொடுத்த தொகையோ 10 இலட்சம் டாலர்!

இப்படி வெற்றிவாகை சூடிய அந்த விசித்திரக்கதை இப்போது மீண்டும் படமாகிவிட்டது. இவ்வாண்டு இறுதியில் திரையிடப்படும்.

அந்தப்படம் நிச்சயம் மூன்று ஆண்டுகள் ஓடும் என்ற நம்பிக்கையில், நியூயார்க், பிராட்வேயிலுள்ள லோவ் ஸ்டேட் தியேட்டரைப் புதுப்பித்துப் பெரிதாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்!

முத்தாரம்

பிழைகள் மலிந்த பள்ளி இறுதிப் பாடநூல்

- மாணவருலகத்திற்கு விழியோட்டி—வழி காட்ட வேண்டியது பள்ளி நூல்களே! அத்தகைய நூல்களில் கற்றோர் கண்டு வருந்தத்தக்க பிழைகளைப் புகவிடலாமா? தமிழகத்து மாணவர்களின் எதிர்காலத்தை அதிகாரத்தால் நிர்ணயித்துக்கொண்டிருக்கும் சென்னை அரசினர் அத்தகைய பிழைகளை 'வருக, வருக' என்று வரவேற்பது கொடுமையிலும் கொடுமை! பள்ளி இறுதித் தேர்வுக்காக அரசினர் வெளியிட்டிருக்கிற தமிழ்ப் பாட நூலில் எண்ணற்ற பிழைகள்! தவறுகள்! தமிழ்க் கொலைகள்! அவைகளை விளக்கித் திருத்தும் கட்டுரை......

புலவர் குழந்தை எழுதுகிறார்.

சுயம்வரம்

- இரு கைகளிலும் மாலை ஏந்திய அரசகுமாரி, இருக்கைகளில் அமர்ந்திருக்கும் அரசர்களில் மனதிற்கிசைந்த ஒருவருக்கு மாலையிடுதலும் சுயம்வரம்தான். போட்டி வைத்து பொருத்தமானவரை தேர்ந்தெடுத்தலும் சுயம்வரம்தான்! —இந்த இரண்டாம் வகை சுயம்வரத்தை முன்னிறுத்தி இருபதாம் நூற்றாண்டுப் பின்னணியில் அமைந்த சுவைமிகு கதை...

மாறன் எம். ஏ., எழுதுகிறார்.

இவற்றோடு
இதழ்-29 விற்பனையாகிறது!

துரைத்தனத்தாரின் துறைமுக மோசடி!

கடற்கரை பெற்றுள்ள நாடுகளின் வாணிகச் செழிப்புக்கு துறைமுகங்கள் ஆதாரமாய் அமைந்துள்ளன. தொழில் துறையில் பல்வேறு நிலைகளில் முன்னேறி இருக்கின்ற நாடுகளாயிருப்பினும் விஞ்ஞான வளர்ச்சியினாலும், பொருளாதார நிலையாலும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புகளைப் பெற்று அனுசரித்து நடந்து கொள்ள வேண்டிய நிலைமை உலகில் ஏற்பட்டுள்ளது. எனவே பொருளாதாரத் துறையில் விழுமிய தொடர்புகளை மேற்கொள்ள நல்ல துறைமுகங்கள் அவசியமாகின்றன. இந்நிலையில், ஒரு நாட்டின் ஏற்றுமதி. இறக்குமதி வியாபாரம் சீரும் சிறப்புமாய்த் திகழ துறைமுகங்களின்வளர்ச்சியில் பெரிதும் கவனம் செலுத்தியாக வேண்டும்.

வணிகச் செழிப்பு குன்றி, வறுமைப் பிணியில் பீடிக்கப்பட்டு. பொருளாதார நிலையில் நிலை குலைந்து வாட்டமுற்றுக் கிடந்த ரஷ்யாவை நல்ல மாற்றத்திற்கும் செழுமைக்கும் கொண்டுசெல்ல மகாபீட்டர் சிறந்த துறைமுகங்களை உருவாக்குவதில் அதிக சிரத்தை காட்டினான்.

தொழில் வளர்ச்சி மேவிய துவக்கக் காலத்தில் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் துறைமுகங்களை விரிவுபடுத்துவதிலும், பெருங் கப்பல்களை நிர்மாணிப்பதிலும் அதிக அளவிற்கு அக்கரை செலுத்தின என்பதை வரலாறு விவரிக்கின்றது,

இந்த முறையைப் போலவே வாணிப வளத்திலும், வீரத்தின் ஏற்றத்திலும் பெரும்புகழ் பெற்றிருந்த பழம்பெரும் நாளில் தமிழ்நாடு சிறந்த துறைமுகங்கள் பல பெற்றிருந்ததாய், கலங்கள் பல கொண்டிருந்ததாய் திகழ்ந்தது.

ஆனால், உலக நாடுகள் அணு சக்தியால் கப்பல் செலுத்தி வளரும் இக்காலத்தில் தென்னகத்தின் நிலைமை இரங்கத்தக்க சீர்குலைவைப் பெற்றுள்ளது. இந்தியாவின் ஒருபகுதியாக,அடிமை நிலைமையில் இருக்கிற ஒரே காரணத்தினால் திராடத்தின் துறைமுகங்கள் சரியான வளர்ச்சியை, முன்னேற்றத்தை அடைய முடியாமல் இருக்கின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் துறைமுகங்களின் வளர்ச்சிக்காகவும், சீர்படுத்துவதற்காகவும் சுமார் 45 கோடி ரூபாய் செலவழிக்க வழிவகை காணப்பட்டது.

கராச்சித் துறைமுகம் பாகிஸ்தானுக்குக் கிடைத்துவிட்டதன் காரணமாக, வேறொரு சிறந்த துறைமுகம் பம்பாய்க்கு வடக்கே வடநாட்டிற்குத் தேவைப்பட்டது. வட நாட்டிற்குத் தேவைப்படும் எந்தத் திட்டமும் உடனடியாக நிறைவேற்றப்படுவது இந்திய ஏகாதிபத்திய சர்க்காரின் மறுக்கமுடியாத தெளிந்த கொள்கையாகும்; இது மரபாகவும் வளர்ந்துவிட்டது. எனவே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 12 கோடி ரூபாய் செலவழித்து கண்டலா துறைமுகத்தை விரிவான வகையில் விரைவாக நிர்மாணித்தார்கள்,

மேலும், பம்பாய்துறைமுகமும் கல்கத்தா துறைமுகமும் சிறப்பாக விரிவு படுத்தப் பெரும்பாலான தொகை பயனாகியது, இந்நிலையில் தென்னாட்டின் பெருந்துறைமுகங்களான விசாகப்பட்டினம், சென்னை, கொச்சி ஆகியவை சரிவரக் கவனிக்கப் படாமல் புறக்கணிப்புக்கு ஆளாயின.

தென்னாட்டைப் பொருத்தமட்டில் சோகமயமான முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்ததற்குப் பிறகு இரண்டாம்திட்டம் மேலும் மோசமான வகையில் உருவாகியது.

பம்பாய், கல்கத்தா, கண்டலா, சென்னை, கொச்சி ஆகிய ஐந்து துறைமுகங்களும் விரிவு படுத்தப்பட ரூ: 76 கோடி செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டன. ஒவ்வொரு துறைமுகத்திற்கான திட்டங்களின் செலவு பின்வருமாறு;

பம்பாய்	29.3 கோடி	ரூபாய்
கல்கத்தா	19 9	,,
கண்டலா	14.0	,,
சென்னை	9·2	,,
கொச்சி	4·0	,,

இந்த வளர்ச்சித் திட்டத்திற்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 40 கோடி ரூபாய் செலவழிக்கப்படும். எனவே, வடக்கில் உள்ள மூன்று பெருந்துறைமுகங்களும் துரிதமாய் எல்லா வகையிலும் முன்னேற ஆவன செய்யப்பட்டுள்ளது, ஆனால், திராவிடத்தின் பெருந் துறைமுகங்கள் இரண்டிற்கும் ஏதும் செய்தாக வேண்டுமே எனும் கண் துடைப்பிற்காக குறைவான அளவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

மேலும், சிறிய துறைமுகங்களின் வளர்ச்சிக்காக இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 5 கோடி ரூபாயும் வட நாட்டிலேயே அதிகமாய் செலவழிக்கப்படுகின்றது.

இந்த வஞ்சகப் போக்கும், புறக்கணிப்புக் கொள்கையும் வேண்டுமென்றே முன்கூட்டியே ஆலோசிக்கப்பட்டு வரையறுத்து செய்யப்படுகின்றது. இந்திய சர்க்காரின் திட்டங்களால் தென்னாடு உரிய முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.

தூத்துக்குடித் துறைமுகம் எல்லாவகையிலும் முன்னேறி பெருந்துறைமுகமாக உருவாக நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இன்றைக்கு பம்பாய், கொச்சி போன்ற மேலக் கடற்கரை துறைமுகங்களிலிருந்தும், அவைகள் வழியாகவும் வருகின்ற கப்பல்களெல்லாம் இலங்கையைச் சுற்றிக் கீழ்க்கடற்கரைப் பகுதிகளுக்கு வருகின்றன. இதனால் கப்பல் கட்டணம் கூடுதலாகி, ஏற்றுமதி இறக்குமதிச் செலவை அதிகரிப்பதுடன் பொருட்களின் விலையும் ஏறிவிடுகின்றன.

பாக் ஜலசந்தியையும், மன்னார் ஜலசந்தியையும் இணைக்க தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே ஒரு கால்வாய் வெட்டினால் மேற்குக் கடற்கரை, கிழக்குக் கடற்கரை இரண்டிற்குமுள்ள கடற்பாதைத் தூரத்தை சுமார் 350 மைல்கள் குறைக்கும். இந்தத் திட்டத்தைத்தான் சேது சமுத்திரத் திட்டம் என்று சொல்வர்.

சேது சமுத்திரத் திட்டத்தின் சாத்தியக்கூறுகள், நன்மைகள் குறித்து ஆராய 1955-ல் சர். ஏ. இராமசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழுவை இந்திய சர்க்கார் அமைத்தது. அக்குழுவும் சேது சமுத்திர திட்டத்தின் சிறப்புகள், மேம்பாடுகள், அவசியம் குறித்து நன்கு விளக்கி தன்னுடைய அறிக்கையை இந்திய சர்க்காருக்கு சமர்ப்பித்தது.

அறிக்கையைப் பெற்றுக் கொண்ட இந்திய சர்க்கார் எவ்வித முடிவையும் எடுக்காமல், எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் வாளாயிருப்பதுடன் காலத்தைக் கடத்தி வருகின்றது. வட நாட்டிற்குத் துறைமுகம் தேவையென்றால் உடனடியாக காரியமாற்றி 25 கோடி ரூபாய் அளவில் திட்டம் தீட்டி கண்டலா துறைமுகத்தை விரைவில் உருவாக்கும் இந்திய சர்க்கார், சுமார் 8 கோடி ரூபாய் செலவாகும் சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றி கவலைகொள்ளாமல் வாளாயிருப்பது எவ்வகையில் இந்திய சர்க்கார் நடைபோடுகின்றது; எந்தத் திசையில் செல்லுகின்றது என்பதை நிதர்சனமாக்குகின்றது.

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேறினால் தூத்துக்குடித் துறைமுகம் பெருந் துறைமுகமாக மாறும். பாண்டி மண்டலத்தின் ஏற்றுமதி. இறக்குமதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும். இந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமென்று அப்பகுதி மக்களும், தென்னகமும் ஒரு குரலாய் முழங்கி வருகின்றனர்.என்றாலும், இந்திய சர்க்கார் இத்திட்டம் நிறைவேற தன்னைக் கட்டுப் படுத்திக்கொள்ளவில்லை.

இந்த ஓரவஞ்சனைப் போக்கு சேது சமுத்திரத் திட்டத்தோடு மாத்திரமல்ல; துறைமுகங்களின் வளர்ச்சியில் மாத்திரமல்ல;கப்பல் கட்டும் தளம் ஒன்று கொச்சித் துறைமுகத்தில் அமைப்பதிலும் தொடர்கின்றது.

இரண்டாவது கப்பல் கட்டும் தளத்தை எங்கு நிர்மாணிப்பது என்று ஆராய்ந்து சிபாரிசு செய்ய இந்தியசர்க்கார் பிரிட்டிஷ் நிபுணாகள் கொண்ட குழு ஒன்றினை சென்ற ஆண்டில் நியமித்தது. அக்குழுவும் இந்தியாவில் உள்ள பல்வேறு துறைமுகங்களை நேரில் சென்று பார்த்து, கடைசியாக இந்திய சர்க்காரிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

சி. ஜம்பு

[தொடர்ச்சி பக்கம்—10]

பத்தாவது அவதாரம்!

'ஐயோ அவரைப் பழிக்காதே! அவர் சித்து வித்தைகள் பல கற்றவர். பாம்பாட்டிச் சித்தர் பரம்பரை. குறிப்பாக, கடவுளின் மறு அவதாரம்'

—என்று மனிதனை மனிதன் நிலையிலிருந்து அகற்றி வேறோர் நிலையில் வைத்துப் புகழ்ந்தால்தான் 'இந்துமத'ப் பித்தேறியவர்களுக்கு மனம் நிம்மதியடையும்!

அதிலும் குறிப்பாக வடநாட்டினருக்கு—மதபோதை தெளியாத நிலையிலிருக்கும் வடபுலத்தவருக்கு மகான என்ற பட்டயத்தை நெற்றியில் அடித்துக் கொண்டால் தான் அவரைக் கொண்டாடுவார்கள்! 'ஷெனாய்' வாத்தியம் முழங்க, 'மேளா' கொண்டாடுவார்கள்.

வடநாட்டிலுதித்த அத்தனை ஆரிய அரசர்களையும் கடவுளாக்கி மகிழ்ந்தார்கள்.

வேள்வியை—புலைநாறும் யாகத்தை எதிர்த்த புத்தனையே கடவுளாக்கி, திருமாலின் அவதாரமாக்கினர்.

கோயில்களை கள்ளர் குகை—எனக் கூறிய காந்தியாரையே 'மகாத்மா'

ஆக்கினர்!

'கடவுளின் அவதாரம்'—என்று சொல்லிக் கூத்தாடினர்.

'சிறையில் அவரைச் சுட வெள்ளையர் முனைந்த போது ஆயிரம் உருவங்கள் காட்டிய மகான' — என்ற புளுகை வாய் கூசாது கூறினர்.

'சிறைக் கம்பிகளுக்கிடையில் காந்தி இருந்தாலும பம்பாயிலுள்ள செளபாத்திக் கடறகரையில் அவர் உருவம் பேசும்' என்ற 'புனிதமான வதந்தி'யைக் கிளப்பினர்.

காந்தியாரை. 'அவதாரமாக்கியதோடு வடவரின் 'கடவுள் தாகம்' தீர்ந்துவிடவில்லை: இத் தலைமுறைக்கு யாரைப் பிடித்து 'அவதாரமாக்குவது'—என ஆழ்ந்து சிந்தித்தனர். கடைசியாக ஒருவரைத் தேர்ந்தெடுத்தனர்!

இத்தனைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் 'கடவுளிடம் எனக்குப் பயம் கிடையாது'—என்று கூறியவர்; சோஷலிசவாதி!

அவர் வேறு யாருமில்லை; காந்தியாரின் சீடர் நேரு தான்!

ஆம்; குசராத்தி மக்கள் வாழும் பகுதிகளில் நேருபிரானைக் கடவுளாகக் கொண்டாட தாபேதா எனுமிடத்தில் ஒரு ஸ்தாபனம ஏற்படுத்தியிருப்பார்கள்!

நேரு, டில்லியிலுள்ள வாய்க்கால் கரையோரத்தில் வாழ்ந்த பெருங்குடியின்வழி வந்தவரல்ல; பாற்கடலில் பள்ளிகொண்ட நாராயண பகவானின் பத்தாவது அவதாரமாக்கும்!

KNOWLEDGE IS POWER

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும், தபால் மூலமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இங்கிலிஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து 24—8—59 வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள் 25—8—59 முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும், பேசவும், கட்டுரைகள் வரையவும், கடிதப் போக்குவரத்து செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்" எனில், மிகைப்படுத்தி சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு

1. 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலிஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம்.
3. இங்கிலிஷ் ஓரளவுக்கு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகவும் பயிற்சி அளிக்கப்படும்.
4. இந்தத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விபரங்களையும் எட்டு நயேபைசே (8 புதிய காசுகள்) தபால்தலை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

துரைத்தனத்தாரின்...

[9—ம் பக்கத் தொடர்ச்சி]

அவ்வறிக்கையில், இரண்டாவது கப்பல் கட்டும் தளம் கொச்சித் துறைமுகத்தில் அமைவது சாலப் பொருத்தமாயிருக்கும் எனக் கண்டிருந்தது. ஆனால் இந்திய சர்க்கார் அவ்வறிக்கையைப் பற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக, இந்திய நிபுணர்கள் கொண்ட மற்றொரு குழுவை நியமித்து, மேலும் கப்பல் கட்டும் தளம் அமைக்க சரியான துறைமுகம் எங்குள்ளது என ஆராய்ந்து அறிவிக்கச் சொல்லியது. இந்திய நிபுணர் குழுவும் கொச்சித் துறைமுகமே ஏற்ற இடம் என்ற முடிவுக்கு வந்துள்ளது.

கேரளாவின் பிற்போக்கு நிலைமையில், கொச்சியில் கப்பல் கட்டும் தளம் அமைந்தால் கொஞ்சம் முன்னேறவும், கேரளாவின் படித்த இளைஞர்களுக்கு வேலைகள் கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும். கொச்சியிலேயே கப்பல் கட்டும் தளம் அமையும் என்ற தணியா ஆசையாலும், நம்பிக்கையாலும் எர்ணாகுளத்தில் உள்ள மாவட்ட வேலைதேடித் தரும் நிலையத்தில் சுமார் 30,000 பேர் வேலைக்காக பதிவு செய்துள்ளனர்.

மேலும், கொச்சியில் கப்பல் கட்டும் தளம் அமைவது இராணுவ ரீதியில் சிலாக்கியமானதாகும். சீனாவிற்கும், பாக்கிஸ்தானுக்கும் கொச்சி வெகு தொலைவிலிருப்பதால் பாதுகாப்பான இடம் என்று கேரள நண்பர்கள் சொல்லுவதை நம்மாலே புரிந்து கொள்ள முடிகின்றது.

கொச்சியில் கப்பல் கட்டும் தளம் அமைக்க சுமார் 19 கோடி ரூபாய்தான் செலவாகும். ஆனால் வேறு துறைமுகங்களில் நிர்மாணிக்கப்படுமானால் இத்தொகையைவிட மிக அதிகமாகவே தேவைப்படுகின்றது. எனவே, பொருளாதாரக்காரணத்தினாலும் கொச்சித் துறைமுகமே ஏற்றதாயிருக்கின்றது.

இந்த சாதகமான நிலைமைகளிலும் கொச்சித் துறைமுகத்திற்கு வாய்ப்புக் கிடைக்காமல், கண்டலாவிற்கு கப்பல் கட்டும் தளம் கிடைக்கும் என்ற பேச்சு அடிபட்டு வருகின்றது. இந்திய சர்க்கார் முடிவெடுக்காமல் இருப்பதற்கு, பிரச்சினையை ஆறப்போட்டு சூட்டைத்தணித்து பின்னர் கப்பல் கட்டும் தளம் கண்டலாவிலேயே அமையும் என அறிவிக்கவே என்று எண்ண இடமிருக்கிறது.

சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை அமைவது பேச்சளவில், ஏட்டளவில், அமைச்சர்களின் சவால் அளவில் இருக்க, வடநாட்டில் கொய்னாவில் அலுமினியத் தொழிற்சாலை கட்ட காரியம் நடைபெற்றுவருவது கப்பல் தளம் அமைப்பதிலும் ஏன் நடைபெறக் கூடாது என்று கருதுவதில் அர்த்தமிருக்கிறது.

இப்படியாக திராவிடம் துறைமுக அபிவிருத்தியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மாறி, துறைமுக வளர்ச்சியில் திராவிடம் உரிய பங்கைப் பெற நாம் முயல வேண்டும். அதற்கான முடிவான நிலைமை காண திராவிட முன்னேற்றக் கழக அணியில் அனைவரும் வந்தே தீரவேண்டும். இந்தப் போக்கை நாட்டின் நல்லறிவாளர்கள் பேச்சு சுட்டிக் காட்டுகின்றது.

நூல்வெளி

வாழ்வு மலர்ந்தது!

எழுதியவர்: இரா. தயாநிதி.

இந்நாடக நூலின் நல்ல தமிழ் நடை, தங்குதடையின்றி ஓடுகிறது. திரைப்பட உலகத்தை நிலைக்களனாக்கிக் கொண்டு எழுந்த இக்கதை பெரும்பாலும் பாதி நாடகம் வரை நாம் காணுகின்ற நிகழ்ச்சிகளையே கூறிவருகிறது.

திரைப்படத் தொழில், ஒழுக்கமின்மை எனும் தொழுநோய் கொண்டோரின் கொட்டில் என்னும் வாதத்தை, நாடகத்தில் வரும் பாத்திரங்கள் அழகாகத் தாக்கி, அந்த அர்த்தமற்ற வாதத்தின் அடிக்கற்களை ஒவ்வொன்றாக இழுத்தெறிந்து விடுகின்றன.

பாத்திரங்களின் குணங்கள் மிகையாகவே இருந்துவருகிறது. எல்லா இடங்களிலும்! ஒரு 'மஞ்சள்' பத்திரிகை தாக்கிற்று என்பதற்காக தற்கொலை செய்து கொள்ள ஓடுகிற நடிகையும், வாய்ப்பேச்சு வாயிலிருக்க அந்த நடிகையிடம் மன்னிப்புக் கேட்க ஓடுகிற 'மஞ்சள்' பத்திரிகை ஆசிரியரும் நாடகாசிரியரின் 'கற்பனைப் பாத்திரங்களே'—என்று நிரூபிக்கின்றன.

பொதுவாக, இந்நாடக நூல் நல்ல தமிழ் நடைக்குப்பாராட்டுப் பெறும் நூல்.

[கிடைக்குமிடம்: மூவேந்தர் பதிப்பகம், காரைக்குடி. விலை: ரூ. 1·50. பக்கங்கள்: 123.]

தமிழ்நாடு

ஆசிரியர்: சின்னசாமி

அறிஞர் அண்ணாவின் முன்னுரை எனும் முத்திரையுடன் வெளிவந்திருக்கும் இந்நூல் தமிழகத்தின் வரலாற்றினை நேற்று—இன்று—நாளை—எனும் பகுப்புக்களுடன் பேசுகிறது.

தமிழகத்தின் தங்க காலமாம் சங்ககாலத்தில் தமிழர்கள் தலை நிமிர்ந்து நடந்த பெருமைக் கதையையும், மொழி பழித்தோரின் விழிபறித்து தேர்த்தட்டில் நின்று மன்னர்கள் ஆடிய குரவை ஆட்டத்தையும், இயற்கையோடு இயைந்த வாழ்வையும் சுவைத்தமிழில் பேசுகிறார், ஆசிரியர்!

நடுவில் புகுந்துவிட்ட நச்சுப் பாம்பாம் வடபுலத்தாரையும் அவர் சமுதாயத்தில் தோற்றுவித்த விஷச் செடிகளையும் சுட்டிக் காட்டி, தமிழகம் பின்னேற்றம் கண்ட அந்த 'இருட்டுக்கால'த்தையும் காட்டுகிறது இந்நூல்,

நாயக்கர், ஆங்கிலேயக்கும்பனி ஆகியோரின் ஆட்சிகளையும் பற்றிப் பேசிவிட்டு, வடவரின் ஒப்புவுமையற்ற ஏகாதிபத்ய ஆட்சியையும் பேசி, அந்த ஆட்சி தமிழகத்திற்குத் தருகிற வஞ்சகப் பரிசுகளை, நஞ்சு நிகர் தொல்லைகளையும் சுட்டிக் காட்டுகிறது.

இந்தத் தொல்லையும், துன்பமும் திராவிட தீபகற்கத்தைத் தொடராதிருக்க ஒரே வழி 'திராவிடப் பிரிவினை'தான் என்பதைதையும் அழகாக வற்புறுத்துகிற இந்நூலில் பிரச்சனைக்குரிய பல கருத்துக்கள் இருப்பினும் ஆசிரியர் முயற்சி, அரியதோர் முயற்சியாகும்!

[கிடைக்குமிடம்: செல்வம் பதிப்பகம், வெண்கலக் கடைத் தெரு, மதுரை, விலை ரூ: 1·30 பக்கங்கள்: 127.]

கலப்படம்

வாடிட வேண்டாம்; வரியிட வழிகளுண்டு!

புராணக் கதைகளிலே விசித்திரமான ஆயுதம் ஒன்று உண்டு—ஆபத்தை அரைக்கணத்தில் பொடிப்பொடியாக்கிவிடும்புரட்சிகரமான 'போர்க்கருவி' அது!

அபாயங்கள் அடுக்கடுக்காகக் குவிந்தாலும் — ஆண்டவனின் இன்னுயிருக்கே இழுக்கு என்ற எண்ணவொண்ணாத நேரம் குறுக்கிட்டாலும்—அந்தக் கருவி தலைகாட்டினால் போதும் —

எதிர்ப்புகள் தூள் தூளாகும்!

எதிரிகளின் தலை சீவி எறியப்படும்!

ஆபத்து கீறி களையப்படும்!

ஆண்டவன் காப்பாற்றப்படுவார்!

—இப்படியாக 'அபாயச்சங்கு' ஊதுகிற நேரத்தில் ஆண்டவன் பயன்படுத்தும் அந்தக் கருவியின் பெயரை 'சக்கராயுதம்' என்று சொல்லுவார்கள்!

புராணக் குப்பையிலே—புளுகு மூட்டைகளுக்கிடையே நாம் காணுகிற கடவுளர் உலகத்தின் கருவியைப்போல், இன்று நம்மைக் காக்க வந்த காவலர்களிடமும் ஒரு ஆயுதம் இருக்கிறதே தெரியுமா, உங்களுக்கு?

மக்களுடைய மனதிலே மருட்சி தோன்றுகிறதா; அவர்களின் முகங்களிலே மலர்ச்சி மறைகிறதா; ஏழைகளின் இதயத்தில் எங்கிருந்தேனும் சோகம் குடியேறுகிறதா; 'ஐயோ....ஈதென்ன கொடுமை' என்ற ஏக்கம் படர்கிறதா —

அடுத்த கணம் அந்தக் கருவி தலைநீட்டும்!

"கொட்டிக் கொட்டி கொடுக்கிறோம் பொருளோடு கண்ணீரை! வரி என்ற பெயரால் வலிய அட்டைபோல் இரத்தத்தை உறிஞ்சுகிறார்களே; ஆனாலும் வாழ்வில்லையே; நல்ல வாழ்வில்லையே?" என்ற கூக்குரல் மலைமோதும் எதிரொலியாய்—குலை நடுக்கும் கூக்குரலாய் எழும்பட்டும்—

அந்தப் புதிரான போர்க்கருவி எங்கிருந்தேனும் வந்து குதிக்கும்!

அது என்ன என்று கேட்கிறீர்களா?

மேல்நாட்டு உயர்ந்த ரக வழவழப்பான 'ஆர்ட்' காகிதத்தில் அச்சிடப்பட்ட இந்த நாட்டு ஐந்தாண்டுத் திட்டம்தான்!

"ஏ, வாழமுடியாது திணறுகின்ற ஏழைகளே! நீங்கள் அழலாமா? கண்ணீர் சிந்தலாமா? பார்வையை மறைத்துவிடும் அக்கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, விழிகளை இங்கே திருப்புங்கள்! வர்ணஜாலங்களை அள்ளி வீசுகின்ற உங்கள் எதிர்காலத்தைக்காணுங்கள், கற்பனைக் கண்களால்! எல்லாம் இந்தத் திட்டத்தால் முடியும் — திட்டத்தால் முடியும்!"

—இப்படித்தான் மக்களிடையேயிருந்து கிளம்புகின்ற மிகப் பெரும் எதிர்ப்பைச் சமாளிக்கிறார்கள், திட்டம் என்ற சாகசக் கருவியினால்!

இந்தத் திட்டம் ஆபத்தைத் தடுக்கும் அரணாகமட்டும் இல்லை; கண்ணீர் சிந்துபவர்களின் உழைப்பை நாளுக்கு நாள் அபகரிக்கும் 'கன்னக்கோ'லாகவும் இன்று பயன்பட்டு வருகிறது!

"மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தபால், தந்தி, ரயில் கட்டணங்கள் உயர்த்தப்படும்!"

—இப்படி புதியசெய்தி ஒன்றை சிரித்துக்கொண்டே வெளியிட்டிருக்கிறார், திட்டக்குழு உறுப்பினரான ஸ்ரீமந் நாராயணன்!

எந்தத் தபால் கட்டணம் உயருகிறது என்று யோசிக்கிறீர்கள்? வெள்ளைக்காரன் காலத்தில் ஒன்றேகாலணாவாக இருந்து—1947-க்குப்பிறகு ஒன்றரையணாவாக மாறி — பிறகு இரண்டணாவாகப் பிறப்பெடுத்து — 'நயா பைசா' காலத்தில் பதினைந்து பைசாவாக மாறியிருக்கிறதே—அந்த அஞ்சலுரையின் விலைதான் இன்னும் அதிகமாகிறதாம்! அதைப்போலவே அஞ்சலட்டை, தபாலில் பொருட்கள் அனுப்புகின்ற செலவு எல்லாமே உயருகிறதாம்; ஏழைகள் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு உயருகிறதாம்!

'இனிக் கடிதம் எழுதுவதால் நாம் வாழ முடியாது; தெரிவிக்க வேண்டிய செய்திகளை நேரில் சென்று அறிவித்துவிடலாமே' என்று புறப்பட்டாலும் விடவில்லை அவர்கள்; ரயில் கட்டணத்தையும் மீண்டும் உயர்த்தப் போகிறார்களாம் — திட்டக்குழு உறுப்பினர்தான் தீர்மானமாகச் சொல்லிவிட்டார்!

இனி, இப்படிக் கட்டணங்களை அதிகப்படுத்திக் கொண்டே சென்றால், அரசாங்கத்தின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று அச்சப்படுவோருக்கு ஒரு ஆலோசனையை—வரி போடும் வழி தெரியாது தவித்துக் கொண்டிருப்போருக்கு புதிய திட்டங்களை—புரட்சிகரமான யோசனைகளைச் சமர்ப்பிக்கிறோம், இதோ:

திட்டம்: 1

கர்ப்பத்தடையைப் போதித்துப் போதித்துத் தோல்வி அடைந்த நமையாளும் சர்க்கார், இன்று 'வாழ்வுத் தடைக'ளைக் கண்கூடாகக் காண்கிறார்கள். இயற்கைச் சாவுகள் குறையக் குறைய செயற்கை மரணங்கள் இன்று அதிகரித்துவிட்டன. ஆகவே அதையே வரிபோடுவதற்குப் பயன்படுத்திக் கொண்டால் என்ன? பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த குழந்தைகளைப் பேணி வளர்க்க வகையற்றுக் கொலை செய்யும் தாய்மார்களுக்கு வரிபோடலாம். அதன்படி,

(அ) கிணற்றிலே எறிந்து கொல்லப்படும் குழந்தைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் பத்து மரண வரி;

(ஆ) சாக்கடை ஓரத்திலே--சந்து முனைகளிலே வீசி எறியப்படும் சிசுக்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து ரூபாய்;

(இ) கழுத்தை நெறித்துக் 'காலனு'க்குப் பலியாக்கப்படும் மழலைகள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு ரூபாய்;

(ஈ) வீட்டிலேயே பட்டினி போட்டு—அழுதழுது வயிறு வீங்கவைத்து—பின் ஆண்டவனின் பாதார விந்தங்களுக்குக் காணிக்கையாக்குகின்ற 'நாளைய மன்னர்'களுக்கு ரூபாய் ஒன்று.

—இப்படிப் புதுவரி விதித்தால் கஜானா நிரம்பும்; திட்டத்திற்குப் பொருளும் குவியும்!

திட்டம்: 2

இன்று நாட்டிலே காசு செலவில்லாமல் — சர்க்காருக்கு வரி தராமல் செய்யப்படுகின்ற ஒரே ஒரு செயல் 'வாய்ப்பேச்சு'தான்! ஏன்; அதற்கும் எந்த நாட்டிலும் இல்லாத புதுமையாக புதிய வரியொன்றை விதித்தாலென்ன? மேலும், இன்று நடைபாதைவாசி முதல் மாடிவீட்டுச் சீமான்வரை — ஏர் பிடிக்கும் உழவர் முதல் பார்மெச்சும் மேதை வரை-இந்த நாட்டு மக்கள் எல்லோருடைய நாவிலும் பட்டுத் தெறிக்கும் மாபெரும் அரசியல் நிகழ்ச்சி ஒன்றுதான் இருக்கிறதே! அதன்படி,

(அ) கேரளாவில் ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டது பற்றி ஆதரித்துப் பேசுவோரின் சொத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கை வரியாக வசூலிக்கலாம்;

(ஆ) அங்கே ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட கொடுமையை — மக்களின் வாக்குரிமை மதிக்கப்படாத திமிரைக் கண்டித்துப் பேசினால் சொத்தில் நான்கில் ஒரு பகுதியை அபராதமாக வசூலிக்கலாம்!

—இதன் மூலம் பெருந்தொகை குவியும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

திட்டம்: 3

இந்த நாளில் எதற்குக் குறைவிருந்தாலும், அமைச்சர்களின் வீடு நோக்கி மூட்டை மூட்டையாக மனுக்கள் குவிதலில் மட்டும் கடுகளவு குறையும் நேர்வதில்லை ஆகவே,

[தொடர்ச்சி பக்கம்—12]

தலைமைக் கழக அறிக்கை.

உறுப்பினர் சேர்த்தல்-புதுப்பித்தல் இறுதித் தவணை அறிவிப்பு

★

1. 1959 ஜூலை திங்கள் 11, 12 ஆகிய நாட்களில் மாயவரத்தில் கூடிய பொதுக்குழுக் கூட்டத்தின் போது, மாவட்டச் செயலாளர்களும், ஏனைய பொதுக் குழு உறுப்பினர்களும் விரும்பிக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உறுப்பினர் சேர்த்தல்— புதுப்பித்தல் ஆகியவைகளுக்கான இறுதிக் கால வரையறை 31—8—59-ஆம் நாள் வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

2. மேற் குறிப்பிட்ட 31—8—59-ஆம் நாளுக்குள் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்பவர்கள் மட்டுமே, அடுத்து நடைபெறும் கழகப் பொதுத் தேர்தல்களான கிளை—வட்டம்—மாவட்டம்-மாநில அமைப்பு–பொதுக் குழு ஆகியவைகளுக்கான தேர்தல்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

3. மேற் குறிப்பிட்ட 31—8—59-ஆம் நாளுக்குள் உறுப்பினர்களைப் பதிவு செய்து அனுப்பும் கிளைகள் மட்டுமே கழகப் பொதுத் தேர்தல்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும்,

4. 31—8—59 -ஆம் நாளுக்குள் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளாத தோழர்களும், பதிவு செய்து அனுப்பாத கிளைகளும், கழகப் பொதுத் தேர்தல்கள் முடிந்த பின்னரே, உறுப்பினராக்கப் படுவதற்கும், கிளையாகப் பதிவு செய்து கொள்ளப்படுவதற்கும் ஆவன செய்யப்படும்.

5. 31—8—59 -ஆம் நாளுக்குள் பதிவு செய்யப்பட்டு, 5—9—59-ஆம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குக் கிடைக்கும் உறுப்பினர் விவரங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். அதற்குப் பிறகு கிடைக்கும் உறுப்பினர் விண்ணப்பத்தாள் கழகப் பொதுத் தேர்தல்களுக்குப் பின்னரே கவனிக்கப்படும்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர்,
தி. மு. க.
(1—8—59)

சுழல் விளக்கு

மாலுமி

வி. சந்தானசாமி;
நாகர்கோவில்.

(?) கேரளத்தில் ஜனதிபதி ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சி செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேரள கவர்னருக்கு டெல்லி சர்க்கார் உத்திரவு போட்டிருக்கிறதே; அதுபற்றி உமது கருத்தென்ன?

கிளர்ச்சிக்காரர்கள் மீது கம்யூனிஸ்டு சர்க்கரர் நடவடிக்கை எடுத்ததைக் கண்டித்த காங்கிரஸ்காரர்கள் அல்லவா இதற்குப் பதில் கூறவேண்டும்? இந்தத் திகைப்பின் காரணமாகத்தானே என்னவோ கேரள கவர்னர் ராமகிருஷ்ண ராவ் பதவியிலிருந்து நழுவுகிறார்.

என். சீனிவாசன்; திருச்சி.

(?) ஆச்சாரியாருடைய புதிய கட்சியின் ஆரம்பம் எப்படியிருக்கிறது?

பெரியாருடைய பழைய க்ட்சியின் முடிவைப் போல இருக்கிறது.

கே. வீரராகவன்; கோவை.

(?) நகரசபையில் ஆட்சி நடத்தத் தெரியாத தி. மு. கழகத்தார் நாட்டு ஆட்சியை எப்படி நடத்தப்போகிறார்கள்—என்று நிதிமந்திரியார் சுப்பிரமணியம் கூறுகிறாரே; அதற்கு உங்கள் பதில யாது?

இதிலிருந்து நாட்டை ஆளும் பொறுப்பு தி. மு. கழகத்திடம் வந்துவிடுமென்று அவர் நம்புகிறார். "அப்படி வந்துவிட்டால் நிர்வாகத்திறன் படைத்த அடியேனுக்கும் ஒரு இடம் தருக!" என்று முன் கூட்டியே இப்படி ஜாடை பேசுகிறார்; அவ்வளவுதான்!

எஸ். தம்பித்துரை;
சென்னை-13.

(?) கம்யூனிஸ்டு சர்க்காரின் சாதனை. நாலு மந்திரிகளுக்குக் கல்யாணம் செய்ததுதான் என்று கேரளத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கிறதாமே?

இருக்கட்டுமே; அந்தச் சாதனையைக்கூட நமது மந்திரி காமராஜர் செய்யவில்லையே!

கோ. தமிழரசு; வேலூர்.

(?) தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏழாவது மாநாடு எனற பெயரால் நடத்தப்பட்ட சென்னை ராஜாஜி ஹால் கூட்டமொன்றில் வரவேற்புத் தலைவர் "மக்களை வசப்படுத்த எழுதுவதைவிட வழிப்படுத்த எழுதுக!" என்று குறிப்பிட்டாரே; அதன் பொருள் என்ன?

புராணம், சாத்திரம், சம்பிரதாயம், கடவுள்கள், கவைக்குதவாக் கதைகள் இன்னோரன்ன மூடநம்பிக்கையின் அடிப்படையில் ஊறிக்கிடக்கும் மக்களை, மேலும் மேலும் அதே ஆசை காட்டி வசப்படுத்தி ஏமாற்றாமல் எதிர் நீச்சல் போட்டு கொள்கைகளுக்காக, இலட்சியத்திற்காக எழுத வேண்டும் என்ற பொருளில் தான் பேசியிருக்கக் கூடும்.

(?) மேற்கு வங்காளத்தில் காங்கிரஸ் சர்க்காருக்கு எதிராக கிளர்ச்சி உருவாகுமா?

ஒருவேளை உருவாகலாம்! ஆனாலும் ஜனதிபதி ஆட்சி உதயமாகாது!

சி. முனிசாமி; சேலம்.

(?) "கேரள ஜனநாயகம்" என்றால் என்ன?

நேருவின் புதல்வி இந்திராவின் மெல்லிய கரங்களால் கழுத்து முறிக்கப்பட்டு குப்பைத் தொட்டியிலே வீசியெறியப்பட்ட பச்சிளங் குழந்தையின் பெயர்தான் "கேரள ஜனநாயகம்" என்பது!

எஸ். கே. சந்திரமோகன்;
பம்பாய்.

(?) வல்லப பந்த் — பண்டித ஜவஹர்லால் நேரு — இருவருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

வல்லப பந்துக்கு கையும் தலையும் எப்போதும் நடுங்கிக் கொண்டேயிருக்கிறது. நேருவுக்கோ, எதிர்காலத்தை நினைத்து நெஞ்சு நடுங்கிக் கொண்டிருக்கிறது — இது தான் ஒற்றுமை.

தர்மராசன்; மலைக்கோட்டை.

தமிழ்நாட்டில் இப்போது மலிவாகப் போய்விட்ட முக்கியமாக இரண்டு என்ன?

ஒன்று உண்ணாவிரதம்! அடுத்தது பொன்னாடை!

கே. எஸ். கே. லட்சுமி;
போடிநாயக்கனூர்.

(?) 'அரசாங்கத்தை எதிர்பார்க்காதீர்கள்' என்று மந்திரிகள் இப்போது புதுப்பிரச்சாரம் செய்வது ஏன்?

அதைச் செய்கிறோம்; 'இதைச் செய்கிறோம்' என்றெல்லாம் உறுதிமொழிகள் தர—பின் அவைகளைக் காற்றிலே பறக்கவிட—மக்கள் மன்றம் தொடுக்கும் வினாக்களுக்குப் பதில் சொல்ல அவர்களுக்கு ஏது முகம்? ஆகவேதான் இந்தப் புதுவழியைக் கையாள்கிறார்களோ; என்னவோ?

பி. எம். மீரான்; கோபி.

(?) இரயில்வே இலாக்காவினால்தான் இந்திய சர்க்காருக்கு லாபம் அதிகம் என்று கணக்கு எடுத்துக் காட்டுகிறதாமே?

அதே கணக்கு காட்டுகின்ற 'நஷ்டப் பட்டியல்' தெரியுமா உங்களுக்கு? இந்தியா முழுதும் இரயில் பெட்டிகளிலிருந்து தினம் ஒன்றுக்கு இருபத்தி நான்கு மின்சார 'பல்பு'கள் வீதம் திருட்டுப் போகின்றனவாம்!

கே. ராமு; சென்னை-4.

(?) சென்னை நகரத்திலே பக்கிங்காம் கால்வாயிலிருந்து எழும்புகின்ற துர்நாற்றம் என்று மாறும்?

இங்கிருப்பவர்களின், 'ஏக இந்திய' பித்து விடுபடுகிற தினத்தன்றே நான் உருப்படுவேன் — என்றே நாற்றமெடுத்து, நல்ல போக்குவரத்து வசதியின்றி கிடக்கிற அந்தக் கால்வாய் எடுத்துச் சொல்கிறது!

80 வருடங்களுக்கு முன்பு வெட்டப்பட்ட 261 மைல் நீளமுள்ள அந்தப் பெரிய கால்வாயால் இன்று குறுகிய பலனைத்தான் சென்னை நகர மக்கள் அடைய முடிகிறது. ஆனால், அதை இன்னும் சிறிது அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, சென்னைத் துறைமுகத்துடன் இணைத்துவிட்டால், அதனால் கிடைக்கக் கூடிய பலன் பல மடங்கு அதிகமாக இருக்குமென்று நிபுணர் குழு ஒன்று முன்பே திட்டம் சமர்ப்பித்தது. அந்தத் திட்டத்தின் வயது இப்போது 30 ஆண்டுகள்; ஆனால் இன்றளவும் ஏட்டளவோடு நிற்கிறது. சென்னை அரசினர் டெல்லியைப் பலமுறை வற்புறுத்தியும் பலனில்லை.

இப்போது 117 கோடி ரூபாய் செலவில் இந்தியாவிலுள்ள கால்வாய்களை விரிவுபடுத்தப் புதுத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். ஆனால் அதில்கூட இந்த பரிதாபத்திற்குரிய பக்கிங்காம் கால்வாய்க்கு இடமில்லை! என்ன செய்வது; அது வடக்கே ஓடுவதாக இருந்திருக்கக்கூடாதா?

செப்டம்பர் 15-ம் நாள்

அறிஞர் பெருந்தகை அண்ணா
பிறந்த நாள் அன்று

அண்ணா
50-ம் ஆண்டு
பொன் விழா மலர்

"முரசொலி" வெளியிடுகிறது!

ஏனைய விளக்கம்
அடுத்த இதழில்!

கலப்படம்...

[11—ம் பக்கத் தொடர்ச்சி]

(அ) அமைச்சர்களின் வீட்டு வாசலில் மனுக்களுடன் படையெடுத்து நிற்கும் பட்டினிக் கும்பல் மனுவைச் சமர்ப்பிக்கும்போது, ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஒன்று வீதம் கட்டணம் செலுத்தவேண்டும்; அப்படிக் கட்டணத்துடன் தரப்படுகின்ற மனுவைத்தான் ஏறெடுத்துப் பார்க்க முடியும்; என்றும்,

(ஆ) மனுவுடன் மாலையும் சூட்ட வருகிறவர்கள், அப்படிச்சூட்டுகின்ற மாலை ஒவ்வொன்றுக்கும் ரூபாய் இரண்டு வீதம் கட்டணம் செலுத்தவேண்டும்; இல்லாவிடில் அமைச்சர் முகம் திருப்பிக்கொள்வார்; என்றும்

இரண்டு புதிய சட்டங்களை விதித்தால், மக்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பாது என்று நம்பலாம்!

திட்டம்-4

இன்று காங்கிரஸ் சர்க்காரின் ஆட்சியில் ஊழல்கள் மலிந்துவிட்டன கூடை கூடையாக எனபது ஊரறிந்த ரகசியம். அவைகளை மக்களின் கண்களுக்குத் தெரிவிக்க ஏராளமான எதிர்க்கட்சி ஏடுகளும் இருக்கின்றன. இந்த நல்ல வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டு கீழ்க்கண்டபடி கட்டணங்கள் வசூலிக்கலாம்.

(அ) சர்க்காரின் ஊழல்களை எடுத்துச் சொல்லும்போது—கண்டிக்கும்போது எவ்வளவுக்கு எவ்வளவு கீழ்த்தரமான சொற்களை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்; அதைப்பற்றிக் கவலையில்லை. அரசியல் சட்டத்தின் 'எழுத்துரிமை'யின்மூலம் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு உண்டு. ஆனால் அப்படித் தூற்றியும் பழித்தும் எழுதுகிற ஒவ்வொரு சொல்லுக்கும் ஐந்து நயாபைசா வீதம் கட்டணம் செலுத்தியாகவேண்டும்.

(ஆ) அத்தகைய நிர்வாக ஓட்டைகள் பற்றி பாகம்பாகமாக பெரிய நூல்களேகூட ஏராளமாக எழுதலாமாதலால், அப்படி எழுதி விற்பனையாகும் தொகையில் 25 சதவிகிதத்தை சர்க்காருக்குச் சேர்ப்பித்துவிட வேண்டும்.

—இப்படிக் கஜானாவை நிரப்ப எண்ணற்ற வழிகள் இருக்கும்போது, எதற்காக தபால், ரயில் கட்டணங்களை அதிகப்படுத்த வேண்டும்? அவரது திட்டக்குழு இந்த யோசனைகளைக் கவனிக்கட்டும்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுப்வரும், மு. கருணாநிதி. 'முரசொலி', அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு. சென்னை—6. தமிழ்நாடு